Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 · National TAMIL DAILY · தேசிய தினசரி · தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 · யாழ்ப்பாணம் · பிலவ புரட்டாசி 25 ஆம் நாள் · ரபி ஆகிர் 30 · (11-10 61) · புதன்கிழமை · இதழ் 205

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
யில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி வினியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

யாழ்ப்பாணத்தில்

# சிறு கைத்தொழில் நிலையங்கள்

## பிரிட்டிஷ் உதவியுடன் ஆரம்பிக்க முயற்சி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் மிகவிரைவில் சிறு கைத்தொழில் நிலையங்களையும் குடிசைக் கைத்தொழில்களையும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளையும் யாழ்ப்பாண மேயர் திரு. டி. எஸ். துரைராசா மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டனின் உதவியுடன் இவ்வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பிரிட்டனின் உதவி வர்த்தகக் கமிஷனரான திரு. ஜே. சி. சுலோமன் திங்கட்கிழமை யாழ்ப்பாண மேயரைச் சந்தித்துப் பேசினர். யாழ்ப்பாணத்தின் கைத் தொழில் வளர்ச்சி பற்றி இருவரும் நீண்ட நேரம் உரையாடியதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணத்தில் பெரும் பணம் படைத்த முதலாளிகளோ பணக்காரர்களோ இல்லாதபடியால் தொழில் வளர்ச்சி காண்பதில் சிரமமிருப்பதாகவும் இதற்கு உதவி செய்யின் இங்கு குடிசைக் கைத்தொழில்களையும், சிறு சிறு கைத்தொழில்களையும் மக்கள் செய்ய வசதி ஏற்படுவதோடு சுயதேவையையும் பூர்த்தி செய்யலாமென்றும் மேயர் தமது கருத்தைத் தெரிவித்தார் எனத் தெரிகிறது.

மேயரின் கோரிக்கைக்குத் தமது சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்ட கமிஷனர் ஆரம்பத்தில் கற்பூரத் தொழிற்சாலை, அலுமினியம் தொழிற்சாலை, சந்தனக் குச்சித் தொழிற்சாலை, மின்சார உபகரணத் தொழிற்சாலையை ஆரம்பிக்கத் தேவையான இயந்திரங்களைத் தந்துதவுவதாக வாக்குறுதியளித்திருப்தாகவும் தெரிகிறது.

இவைகள் ஆரம்பிக்கப்படுவதற்குள்ளான இடைக்காலத்தில் குடிசைக் கைத்தொழில்களிலும், சிறு கைத்தொழில்களிலும் மக்களின் மனதைத் திருப்பக்கூடியதாக பிரசாரஞ் செய்யப்பட வேண்டுமெனவும் மேயர் கூறியதாகத் தெரிகிறது.

இலட்சக் கணக்கான ரூபாய்க்களுக்கு வருடாவருடம் யாழ்ப்பாணம் மின்சார உபகரணங்களையும், மற்றும் பொருட்களையும் இறக்குமதி செய்வதாகவும் இதற்கு இத்

(5ம்பக்கம் பார்க்க)

## நிதி மந்திரி நாடு திரும்பினர்

கொழும்பு, செவ்வாய்

நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தனது வெளிநாட்டு சுற்றுப்பிரயாணத்தை முடித்துக்கொண்டு இன்று பிற்பகல் கொழும்பு திரும்பினர். மந்திரிகள், எம். பி. க்கள், ராஜதந்திர தூதர்கள், நண்பர்கள் ஆகியோர் இரத்மலானை விமான நிலையத்தில் அவரைச் சந்தித்தனர்.

## 5000 ஆசிரியர்கள் ஒன்றுபடுவர்

கொழும்பு, செவ்வாய்

தங்கள் கோரிக்கைக்குப் போராடுவதற்காக நாட்டின் சகல பகுதிகளிலும் சேவை செய்யும் 5000 ஆங்கில உதவி ஆசிரியர்கள் சீக்கிரம் ஒரே சங்கத்தின் கீழ் ஒன்றுபடுவர். ஆங்கில ஆசிரியர்களைக் கொண்ட பல யூனியன்களையும் ஒரு ஐக்கிய சங்கத்தின் கீழ் ஒன்றுபடுமாறு அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## உத்தியோக மொழிச்சட்டம் : கமிஷன் ஆராயும்?

கொழும்பு, செவ்வாய்

அமைச்சுகளிலும் அரசாங்க இலாகாக்களிலும் உத்தியோக மொழிச் சட்டம் எவ்விதம் செயல்படுகிற தென்பதுபற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஒரு கமிஷனை நியமிக்க வேண்டுமென்று நீதியமைச்சர் திரு. சாம். பி. ஸி. பெர்னன்டோ விரைவில் அரசாங்கத்தைக் கேட்கவிருக்கிறர்.

இந்த உத்தேச கமிஷனில் ஏழுபேர் அங்கம் வகிப்பார்களென்று அறியப்படுகிறது.

## 32 கோடி செலவில் உரத் தொழிற்சாலை

புதுடில்லி, அக். 10

32 கோடி ரூபாய் செலவில் ரசாயன உரஉற்பத்தி தொழிற்சாலை ஒன்று மைசூரில் ஆரம்பிக்கப்படும்.

## நாதஸ்வர வித்வானுக்கு நேரு பதக்கம்

புதுடில்லி, அக். 10

இன்று பிரதம மந்திரி நேருவின் இல்லத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில், பிரபல தென்னிந்திய நாதஸ்வர வித்வான் குளிக்கரை பிச்சையப்பாவுக்கு, ஸ்ரீ நேரு தங்கப் பதக்கம் ஒன்றை வழங்கினர்.

## ஆயுர்வேத வைத்தியர்களின் தொழில் ஒழுங்கீனங்கள்

### ஏராளமான புகார்கள் கிடைத்திருக்கின்றனவாம்

கொழும்பு, செவ்.

பெரும்பாலான பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களின் தொழில் ஒழுங்கீனங்கள்பற்றி ஏராளமான புகார்கள் கிடைத்திருப்பதாய் சுதேச வைத்திய அபிவிருத்தி கமிஷனரின் 1960-ம் ஆண்டு நிர்வாக அறிக்கை கூறுகிறது.

இப்புகார்களில் பெரும்பாலானவை பொய்யான வைத்திய அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கியதாகக் கூறப்படுபவை என அறிக்கை தெரிவிக்கிறது. சபை இவற்றைப் பரிசீலனை செய்த பின் சிலருக்குத் தகுந்த தண்டனை அளித்ததாயும் சிலருடைய பெயர்கள் ஆயுர்வேதப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்பட்டதாயும் அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

## உலக அகதிகள் நிதிக்கு திரட்டிய 11000 ரூபாய்

### அனுப்புவதற்கு அரசாங்கம் மறுப்பு?

கொழும்பு, செவ்வாய்

உலக அகதிகள் நிதிக்காக தேசிய கிறிஸ்தவ சபை திரட்டிய 11000 ரூபாயை அனுப்புவதற்கு செலாவணிக் கட்டுப்பாட்டு பர்மிட்டை அனுமதிக்க அரசாங்கம் மறுத்துவிட்டது. வெளிநாடுகளுக்கு பௌத்த நன்கொடைகளை மட்டுமே அனுப்பலாம் என்ற காரணத்தின் பேரிலேயே இது மறுக்கப்பட்டதாம்.

உலக அகதிகள் தினம் சம்பந்தமாக தபால் இலாகா வெளியிட்ட முத்திரைகளின் விற்பனை, உலக அகதிகள் நிதிக்கு அனுப்பப்பட்டதா இல்லையா என்பதும் தெளிவாகத் தெரியவில்லை எனக் கூறப்படுகிறது.

இதில் ஒரு பகுதியை மட்டும் அகதிகள் நிதிக்கு அனுப்பிவிட்டு, மிகுதியை தபால் இலாகா வருமானத்தில் சேர்த்துக்கொண்டது எனவும் கூறப்படுகிறது.

## மார்ட்டின் ரேட் இரட்டைக்கொலைவழக்கு

### விசாரணைக்குப்பின் 28-ந் திகதி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்ட்ரேட் திரு. அரசு வால்டன் முன்னிலையில் மார்ட்டின் ரேட்டு இரட்டைக் கொலை வழக்கு சம்பந்தமான விசாரணை தொடர்ந்து நடைபெற்றது.

இவ்வழக்கில் சின்னத்துரை குணரத்தினம் என்ற ஒரு தபால் ஊழியர், மனுவேல் பிள்ளை அருளானந்தம் துரைராஜா, மனுவேல்பிள்ளை செல்வம் மரியதாஸ் ஆகிய இருவரையும் கத்தியால் குத்திக் கொலை செய்ததாய்க் குற்றம் சாட்டப்பட்டது.

காலஞ் சென்ற துரைராஜாவின் 11 வயதுப் புதல்வன் ராசநாயகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவ தினத்தன்று இரவு சுமார் 7-30க்கு நான் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது வாக்குவாதம்பண்ணும் சத்தம் கேட்டது. நான் ஓடிச் சென்று பார்த்தேன். அப்போது 10, 15 பேர் எங்கள் வாசலருகில் இருந்ததைக் கண்டேன். என் தந்தை அங்கு சென்று சண்டை பிடித்துக் கொண்டிருந்த இருவரையும் கலைந்து போகுமாறு கூறினர். குணரத்தினம் தனது காம்பவுண்டுக்குள் போய் வந்து ஒரு கிரிஸ் கத்தியால் எனது சிறிய தந்தையைக் குத்தினர். 12அடி தூரத்திலிருந்து என் தந்தை அங்கு விரைந்தபோது அவரையும் குத்தினர்.

பிரேதப் பரிசோதனை நடத்திய டாக்டர் வேலும்மயிலும் வாக்குமூலமளித்தபின் வழக்கு இம்மாதம் 28-ந் திகதி ஒத்தி வைக்கப்பட்டது.

## அமெரிக்காவும் அங்கீகரித்தது

வாஷிங்டன், அக். 10

சுதந்திர சிரியா அரசாங்கத்தை அமெரிக்கா அங்கீகரித்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது. சீக்கிரம் பிரிட்டனும் சிரியாவை அங்கீகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சாவூதி அராபியா, டுனிஸியா, ஈரான் ஆகிய அராபிய நாடுகளும் சிரியாவை அங்கீகரித்தன.

## 'எதிர்காலத்தில் சொத்துக்களை உரிமை கொண்டாடுவதும் சந்தேகமே'

### மாத்தறை கூட்டத்தில் திரு. அமரசூரியா பேச்சு

கொழும்பு, செவ்.

"தேயிலைத் தோட்டங்கள், ரப்பர் தோட்டங்கள் அல்லது இதர சொத்துக்களை வைத்திருப்பவர்கள் எதிர்காலத்தில் அவைகள் தங்கள் சொத்து எனக் கூறிக் கொள்ள முடியுமா என்பதே சந்தேகமாகயிருக்கிறது. அரசாங்கம் தனது பெரும்பான்மை பலத்தால் அவைகளைத் தானே மேற்கொள்ளவும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது." என மாத்தறை ராகுல கல்லூரியில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. எச். டப்ளியு. அமரசூரியா கூறினர்.

"அறிவு அல்லது நற்பழக்கங்களையும் கூட அது பறிமுதல் செய்யக்கூடும். பெற்ரோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு மதச் சூழ்நிலையில் சிறந்த கல்வி அளிப்பதுபற்றி ஆராய வேண்டும்" என்றும் அவர் கூறினர்.

## பிச்சைக்காரர்கள் மீது நடவடிக்கை

பாணந்துறை, செவ்வாய்

அரசாங்க காரியாலய கட்டடங்களின் புறத்திண்ணைகளிலும் ஓடைகளிலும் தாழ்வாரங்களிலும் படுத்துறங்கிக்கொண்டிருந்த பிச்சைக்காரர்கள் நடுவே பொலிஸ் கூட்டம் ஒன்று நடவடிக்கை எடுத்துக் கொண்டது.

ஆண்களும் பெண்களும் கொண்ட சுமார் 50 பிச்சைக்காரர்களைப் பொலிசார் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். பிச்சைக்காரர்கள் குழந்தைகளுடன் காணப்பட்டார்கள்.

பொலிஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. எல். பி. வீரசூரியாவின் தலைமையில் பொலிஸ் குழு ஒன்று மேற்படி முயற்சியில் ஈடுபட்டது.

## வரி விளம்பரம்


### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

பண்டகசாலை மனேச்சர். மாச வேதனம் ரூபா 120-00

தராதரம்

(1) சிரேஷ்ட தராதரப்பத்திரம்.

(2) கூட்டுறவுப் பயிற்சித் தராதரப் பத்திரம்.

(3) இரண்டு நற்சாட்சிப் பத்திரம்.

(4) வயது 25-க்கும் 35-க்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

(5) ரொக்கப்பிணை ரூபா ஆயிரம்.

(6) ஆதனப்பிணை ரூபா இரண்டாயிரம்.

விண்ணப்பங்கள்: இராமநாதபுரம் பல நோக்கு கூட்டுறவுச் சங்க காரியதரிசி அவர்கட்கு பதிவுத் தபால் மூலம் 13-10-61க்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

### நிறுவையாளர்

பண்டகசாலை நிறுவையாளர் பிணைப் பணம் ரூபா 250-00. மாச வேதனம் ரூபா 45-00.

வியாபார அனுபவம் வாய்ந்தவராகவும் 18 வயதிற்கும் 52 வயதிற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

தபால் விலாசம்: காரியதரிசி, இராமநாதபுரம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி.

## வியாபாரம்பெருக விளம்பரம்செய்க


## ஆசிரியர் சங்க மகாநாடு

காத்தான்குடி, திங்கள்

மட்டக்களப்பு, தெற்கு வட்டார ஆசிரியர் சங்க மகாநாடு சிவானந்த வித்தியாலய அதிபர் திரு. கே. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

பெரும்பாக வித்தியாதரிசியாகக் கடமைபுரிந்து மரணமடைந்த திரு. டி. ஜே. இம்மானுவல் மறைவுக்கு அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.

திரு. எம். ஜே. சீமான் பிள்ளை பேசுகையில் அறிவை மாணவர்களுக்கு ஊட்டுவதுடன் மட்டும் ஆசிரியப்பணி முற்றுப்பெறவில்லை யென்றும் மாணவரிடையே ஒழுக்கத்தை வளர்ப்பதையும் ஆசிரியர்கள் தம் குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமென்றும், நல்லாசிரியன் ஒருவனைச் சென்றடைந்த மாணவன் ஆசிரியர் நடை, உடை, பாவனைகளைப் பின்பற்றி அவரைப்போல் உயர்வடைகிறனென்றும் கூறினர்.

பலசமூகத்தைச்சேர்ந்த ஆசிரியர்களும் நமது மகாநாட்டுக்குச் சமுகம்கொடுப்பதால் இனிவரும் மகாநாடுகளின் ஆரம்பத்தில் தமிழ்மொழி வாழ்த்துப் பாடவேண்டும் என்னும் ஒரு தீர்மானமும் இம்மாத இறுதியில் கலைவிழா ஒன்றைநடாத்துவது என்னும் மற்றோர் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

# ஆகம பாடசாலைகள் நிறுவவேண்டும்

## தென்னிந்திய அர்ச்சகர் சங்கம் கோரிக்கை

சென்னை, அக். 9

தென்னிந்திய அர்ச்சகர் சங்கத்தின் 13-வது மகா நாடு ஸ்ரீ எத்திராஜ கல்யாண நிலையத்தில் நடைபெற்றது. இம்மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆலயங்களில் அர்ச்சகர்களை அதிகாரிகள் வெறும் சேவகர்களாகப் பாவிக்காமல் மதிப்புக்குரிய நபர்களாகக் கருதவேண்டும். இது உத்தரவுகளில் இடம் பெறவேண்டும்.

அர்ச்சகர்களுக்கு கோவில் சன்னதிகளின் மூலமாகக் கிடைக்கும் காணிக்கைகள், வருமானங்கள் முதலியன அவர்களுக்கே உரியதாகவேண்டும். இதில் நிர்வாகத்தினர்களாவது அல்லது டிரஸ்டிகளாவது எவ்வித பாத்தியமும் கொண்டாடக்கூடாது.

கோவில் பூஜைக்காக அன்ருட படித்தரம் தானியமாக திட்டப்படி உடனடியாக கொடுத்து விடவேண்டும். வெகுநாளாக தங்கியுள்ள படித்தரங்களை இந்த பசலியிலேயே கொடுத்து விடவேண்டும் என்று அரசாங்கத்தாரை கேட்டுக்கொள்ள வேண்டுமாய் தீர்மானிக்கப்பட்டது.

3-வது ஐந்தாண்டு திட்டத்தில் தர்மஸ்தாபனங்களுக்கும், அவைகள் சம்பந்தப்பட்ட கல்வி நிலையங்களுக்கும் ஜாகை வசதிகளுக்கு நிலங்கள் ஒதுக்கப்படுவதற்கும் நிதிவசதி செய்யும்போது, சென்னையில் ஒரு கல்லூரியும் பிரதி ஜில்லாவிலும் ஆகம பாடசாலைகளும், ஆகம புத்தகங்கள் அச்சிடுவதற்கும் நிதி வசதிகள் அர்ச்சகர்களுக்கு ஏற்படுத்த வேண்டுமாய் தீர்மானிக்கப்பட்டது.

கோயில் அர்ச்சகர்களுக்கு கோவிலுக்கு அருகாமையிலுள்ள நிலங்களில் இலவசமாக ஜாகை வசதி செய்து, கொடுக்கவேண்டும். அல்லது குடியிருக்க வசதி கொடுத்து சர்வீஸ் உள்ளவரையில் சலுகை தரவேண்டும். சர்வீஸ் மானியங்களை திருப்பிக்கொடுத்துவிடல் வேண்டும். இதற்கு கமிஷனவர்கள் தகுதியான முயற்சி செய்து தருமாறு இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஆகம அகராதி என்னும் நூலை யாவரும் அறியக்கூடிய பல மொழிகளில் அச்சிடுவதற்கு திட்டத்தை தயார்செய்து அதை மகாநாட்டில் ஒத்துக்கொண்டு தர்மஸ்தாபன கமிஷன் மூலமாக அரசாங்கம் அச்சிட வேண்டுமாய் சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

பூஜைக்குரிய அர்ச்சனைகள் விதிப்படி கோவில்களில் பழக்க வழக்கப்படியே நடத்திவர வேண்டுமென்று இம்மகாநாடு தெரிவிக்கிறது.

இச்சங்கத்தினர் அறநிலையப் பாதுகாப்பு இலாகா மந்திரி எம். பக்தவத்சலத்துக்குச் சமர்ப்பித்துள்ள வேண்டுகோளில் கீழ்காணும் குறைகளை நிவிர்த்தி செய்யுமாறு கேட்டுள்ளனர்.

அர்ச்சகர்களுக்கு ஆகம சாஸ்திரங்களில் நன்கு பயிற்சி கொண்டு, முறைப்படி வழிபாடு செய்ய, ஆகம பாடசாலைகளை நிறுவப்படவேண்டும்.

தமிழ் நாட்டு சட்ட சபைகளிலும், அறநிலைய அமுல் வகுக்குங் காலங்களிலும், அர்ச்சகர்களுக்கு, பிரதிநிதித்துவம் அளித்தல் வேண்டும்.

சங்கத்தின் ஆதரவில் தயாராகும் மூல ஆகமங்களை அச்சிடுவதற்கு உதவி மான்யம் அளித்து தமிழ் நாட்டிலுள்ள தேவஸ்தான நூல் நிலையங்களில் வைக்குமாறு செய்தல் வேண்டும்.

## சம்பளக்கமிஷன் சிபார்சு

### சுகாதார ஊழியர் அங்கீகரித்தனர்

யாழ்ப்பாணம், புதன்

அகில இலங்கை சுகாதார இலாகா தொழிலாளர் சங்கத்தின் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது. புதிய சம்பளக்கமிஷன் அறிக்கை பற்றி நீண்ட நேர விவாதம் நடைபெற்றது. சம்பளக் கமிஷன் சிபார்சுகளை கூட்டம் அங்கீகரித்தது.

## இமய மலையில் நேபாள உரிமை

காட்மாண்டு, அக். 10

இமயமலைமீது நேபாளத்துக்குள்ள உரிமையை சீன ஏற்றுக்கொண்டுவிட்டதாக ஒரு செய்தி கூறுகிறது. ஆனல் இமயமலையில் சீன எல்லைப் பக்கத்திலிருந்து ஏறும் உரிமை சீனவுக்கு இருக்கிறதாம்.

# அரசாங்க ஊழியர் அதிருப்தி

## சம்மேளனத் தலைவர் கூறும் காரணங்கள்

அனுராதபுரம், செவ்வாய்

"இன்றைய அரசாங்கம் தொழிற் சங்கங்களுக்கு வாய்ப் பேச்சளவில் மட்டும் சேவை செய்கிறது. எமது கோரிக்கைகள் யாவும் செவிடன் காதில் ஊதிய சங்குபோலாகி விடுகின்றது.

இவ்வாறு, அனுராதபுரத்தில் நடைபெற்ற இலங்கை போஸ்ட் மாஸ்டர்கள் சங்கக் கூட்டமொன்றில் சங்கத் தலைவரும் அரசாங்க சேவை தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் காரியதரிசியுமான திரு. வில்பிரெட் பெரேரா, கூறினர்.

திரு வில்பிரேட்பெரேரா மேலும் கூறியதாவது:-

"தேசிய அபிவிருத்தி வரி என்று சொல்லி அரசாங்க சேவையாளரின் சம்பளத்தை இந்த அரசாங்கம் குறைத்திருக்கின்றதேயன்றி வேறு எதுவும் செய்யவில்லை. எமது முறைப்பாடுகள் யாவற்றுக்கும் அரசாங்கம் விடுத்த மறுமொழி,—"உங்கள் விஷயங்கள் கவனிக்கப்படுகின்றன" என்பதே. இதன் அர்த்தம் என்ன? எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதே அது.

"இன்றைய அரசாங்கத்தின் போக்கு அரசாங்கசேவையையும் சாரமற்ற பொருளாக்கி விட்டது. முனன்ரெல்லாம் புத்தி சாதுர்யம் வாய்ந்த பலர் அரசாங்க சேவையாளர்களாக இருந்தனர். ஆனல் இன்று அரசாங்க சேவையில் அத்தகையோர் அருகிவருகுன்றனர் தனிப்பட்டவர்களுக்கு அரசாங்கம் விதியமைப்பதோடு தனியார் அரசாங்கசேவை உயர்பதவிகளுக்கு அவர்களை அமர்த்துகிறது. அரசாங்க சேவைத் தொழிற்சங்க அங்கத்தவர்கள் என்ற முறையில் அரசாங்க சேவையாளராகிய நாம் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியாது".

"அரசாங்க சேவையாளரிடையே அதிருப்தி ஏற்பட்டிருப்பதால் அரசாங்கசேவை நிலைமை பற்றி ஆலோசிக்குமாறு பிரதம மந்திரியைக் கேட்டுக் கொள்கின்றேன். நேரடி நடவடிக்கையில் நாம் ஈடுபடமுன்னர் அரசாங்கம் செய்யவேண்டியது ஒன்று உண்டு. தொடர்புகொளவதற்குத் தொடர்பு சபைகளையும் விசாரணைச் சபைகளையும் நிறுவியுள்ளது போல அரசாங்கத்துடன் நாம் தொடர்புகொள்வதற்கும் சபைகள் நிறுவப்படல் வேண்டும்.

எமது நேரடி நடவடிக்கை அரசாங்கத்துக்கும் உதவாது. தொழிற் சங்கத்துக்கும் உதவாது. தொழிற் சங்கங்கள் யாவற்றுள்ளும் போஸ்ட் மாஸ்டர்கள் சங்கம் தனி சிறப்புடன் விழங்குவது யாவரும் அறிந்ததே. ஜெனீவாவில் தலைமைக் காரியாலம் அமைந்துள்ள சர்வதேச தபால் தந்தி ஸ்தாபனத்தில் எமது போஸ்ட் மாஸ்டர் சங்கம் அங்கத்துவம் வகிக்கிறது"

அரசாங்கத்தை வீழ்த்துவது தொழிற்சங்கங்களின் நோக்கமாகாது. அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதுடன் தமது நியாயமான உரிமைகளையும் பெற்றுக்கொள்வதே தொழிற் சங்கங்களின் நோக்கம். ஒரு தொழிற்சங்க அங்கத்தவர்கள் தம்மிடையே முரண்பட்டுக் கொள்வதுண்டு. ஆனல் அங்கத்தவர்கள் அனைவரும் தொழிற்சங்க சபைத் தீர்மானத்தின்படியே ஒழுகுவா. ஒரு ஜனநாயக நாட்டில் தொழிற் சங்க முறை இப்படித்தான் இருக்கவேண்டும்!

திரு. பெரேரா சம்பளக் கமிஷன் அறிக்கைபற்றிக் குறிப்பிடும்போது போஸ்ட் மாஸ்டர் சங்க அங்கத்தவர் எவரும் அதனல் லாபம் அடையப் போவதில்லை என்ருர்.

தொழிற் சங்கங்கள் அனைத்தும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் எனத் திரு, வில்பிரெட் பெரேரா வலியுறுத்தினர்.

# 'ஆசிரியர் நலன்களைப் பாதுகாப்பேன் அரசியல் உரிமை அளிக்கமாட்டேன்'

— கல்வி மந்திரி

பதுளை, செவ்வாய்

"அரசாங்க ஊழியர்களாகிய பின்னரும் அரசியலில் ஈடுபடுவதற்கு ஆசிரியர்களுக்கு உரிமையிருக்கவேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். கல்வி மந்திரி என்ற முறைவில் ஆசிரியர்களின் நலன்களைப் பாதுகாப்பேன். அத்துடன் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளையும் செவிமடுத்து அவர்களின் முன்னேற்றத்துக்கு உழைப்பேன்"

ஊவா மாகாணத்து ஆசிரியர் சங்கம் பதுளை உயர்தரப் பள்ளிக் கூடத்தில் கூடிய கூட்டமொன்றில் பேசுகையில் கல்வி மந்திரி ஜனுப் பதியுத்தீன் மாமூத் இவ்வாறு கூறினர். சங்கத் தலைவர் திரு. ஏ. கே. முருகேசு தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தலைவர் வரவேற்புரைக்குப் பதிலளித்துப் பேசுகையில் கல்வி மந்திரி மேலும் கூறியதாவது:-

"அகில இலங்கை ஆசிரியர் சங்கம் போன்ற உத்தியோகஸ்தர்கள் ஸ்தாபன மொன்றுக்கு வேறு உத்தியோகஸ்தராகிய வழக்கறிஞர் திரு. ஜே. டி. ஆசீர்வாதம் காரியதரிசியாக இருக்க முடியாது. ஆசிரியர்கள் சங்கமொன்றை வழக்கறிஞர் ஒருவர் எவ்வாறு பிரதிநிதித்துவம் செய்யலாம்?

அ. இ. ஆ. சங்கக் காரியதரிசி திரு. ஆசீர்வாதம் பல பிரச்சினைகள் பற்றி எனக்கு மகஜர்களை அனுப்பிவைத்துள்ளார். கல்வி மந்திரியுடன் நேரடியாகக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று கோரியுள்ளார். ஆனல் திரு. ஆசீர்வாதத்தின் தலைமையில் வரும் தூதுகோஷ்டி எதையும் நான் சந்தித்துப் பேசப்போவதில்லை. ஆசிரியர்களின் பிரதிநிதியாக வருவதற்கு திரு. ஆசீர்வாதம் ஒரு ஆசிரியர் அல்லவே? தூய்மை மிக்க உத்தியோகமொன்றில் ஸ்தானம் வகிக்கும் ஆசிரியர்கள், தம்மைத் தாமே பார்த்துக்கொள்ளலாம்; ஒரு வழக்கறிஞரை அவர்கள் தமது பிரதிநிதியாக அனுப்ப வேண்டியதில்லை.

"அரசாங்க ஆசிரியர்களாகக் கடமையாற்ற விரும்பாத ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நஷ்ட ஈடு வழங்குவதற்கு யோசனை செய்து வருகிறது. இத்திட்டம் பற்றி அரசாங்கம் கவனமெடுக்கவிருக்கிறது. மந்திரி என்ற முறையில் ஆசிரியர்களின் நன்மைக்கு வேண்டியதை நான் செய்யவிருக்கிறேன்."

ஊவா மாகாண ஆசிரிய சங்கத் தலைவர் திரு. முருகேசு பேசுகையில் கூறியதாவது:-

"எமது பள்ளிக்கூடங்கள் கல்வித் தலங்கள். ஆனல் இந்தப் புனிதமான இடங்களே மக்களைப் பிரித்து வைப்பதற்குத் தூபம் போடும் இடங்களாகிவிட்டன. அனைவரையும் ஒன்று சேர்க்கும் கருவிகளே இன்று தேவைப்படுகின்றன.

"எந்த அரசாங்கம் ஆட்சி பீடத்தில் அமர்ந்தாலும் ஆசிரியர்கள் கீழ்ப்படிவுள்ளவர்களாகவே இருந்து வந்திருக்கிறார்கள். அ. இ. ஆ. சங்கம் எந்த விதத்திலும் அரசாங்கத்துக்குக் கீழ்ப்படியவில்லையென்று கூறினல் அது ஆதாரமற்ற கூற்ருகும் என்பதை நான் எமது கல்வி மந்திரிக்குக் கூற விரும்புகிறேன். தொழிற் சங்கம் என்ற அளவில் எமது தொழில் நலன்களில் நாம் அக்கறையுடையோம். வித்தியாதிபதி நிர்வாகத்துக்குக் கீழல்லாத ஏனைய அரசாங்க உதவி பெறும் பள்ளிக்கூடங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களது எதிர் காலம் பற்றி எதுவும் தெரியவில்லை.''

கல்வி மந்திரி ஜனுப் பதியுத்தீன் மாமூத் உத்தியோக பூர்வமாக பதுளை சென்றது இதுவே முதற் தடவையாகும்.

## பிரிட்டிஷ் மந்திரி சபை திடீர் மாறுதல்

லண்டன், அக். 9

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் மாக்மிலன் திடீரென்று தமன் மந்திரி சபையில் மாற்றம் செய்துள்ளார்.

இதுவரை காலனி நாடுகளின் விவகார மந்திரியாக பதவி வகித்த திரு. மக்லியோட் அப்பதவியிலிருந்து கொமன்சபை முதல்வராகவும் பார்லிமெண்டரிக் குழுத் தலைவராகவுத் நியமிக்கப்பட்டுள்ளார். திரு. மோர்லி புதிய காலனி மந்திரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

# உ. பி. கலகத்தில் மாண்டவர் தொகை 32

## 1,300 பேர் கைது

### அமைதி நிலவுவதாக அறிவிப்பு

#### பாகிஸ்தான் கவலை

லக்ஷ்மணபுரி, அக். 10

வகுப்புக் கலவரம் ஏற்பட்ட உத்தர பிரதேசத்தின் ஜில்லாக்களில் இப்பொழுது அமைதி நிலவுவதாகவும் மாமூல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.

வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பிவிடுபவர்களையும் வதந்திகளைப் பரப்புவோர்களையும் ராஜ்ய அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமலே கைது செய்து காவலில் வைக்கும் அதிகாரம் ஜில்லா நீதிபதிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

வகுப்புக் கலகத்தில் இதுவரை 32 பேர் மாண்டதாகவும் சுமார் நூறுபேர் காயமடைந்துள்ளதாகவும் ஆயிரத்துமுன்னூறு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அலிகார் என்ற இடத்திலுள்ள பல்கலைக்கழக மாணவர் சங்க நிர்வாகிகள் தேர்தலைத் தொடர்ந்து ஏற்பட்ட இக் கலகம் மற்றும் சில பகுதிகளுக்கும் பரவியது வாசக நேயர்களுக்கு நினைவிருக்கலாம்.

இக் கலகத்தினல் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் ஆதரவற்றவர்களுக்கு அரசாங்கம் பண உதவியளிக்குமென உத்தரபிரதேச ராஜ்ய முதன் மந்திரி தெரிவித்தார்.

**சாஸ்திரி வேதனை**

நேற்று பம்பாயில் தமக்களிக்கப்பட்ட ஒரு வரவேற்பு உபசாரத்தில் இந்திய உள்விவகார மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி பேசுகையில் உத்தரபிரதேச கலக சம்பவங்கள் அதுவும் குறிப்பாக தேசிய ஒருமைப்பாடுபற்றிய மகாநாடு நடந்து முடிந்த இச் சமயத்தில் கலகம் ஏற்பட்டது தமக்கு பெரும் மனவேதனையளிப்பதாக தெரிவித்தார்.

நிலைமை சீர்திருந்தாவிடில் சமூக விரோத நடவடிக்கையில் ஈடுபடுபவர்களை அடக்குவதற்கு அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி நேரிடும் என்று திரு. சாஸ்திரி கூறினர்.

சிறுபான்மை மக்கள் நாட்டின் அமைதியைப் பாதுகாக்கவேண்டுமென்றும் அவர்களுக்கு குறைபாடுகளிருந்தால் அவற்றை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அமைதியான முறையிலேயே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் திரு. லால்பகதூர் சாஸ்திரி கேட்டுக்கொண்டார்.

பம்பாய் பத்திரிகையாளர் சங்கத்திலும் திரு. சாஸ்திரி பேசினர்.

அரசியல் கட்சிகளுக்கென நடத்தை நெறி உருவாக்கப்பட்டது போல் பத்திரிகைகளுக்கும் நடத்தை நெறிக் கோட்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டுமென்றும் பத்திரிகைகள் கட்சிச் சார்போ கோஷ்டிச் சார்போ இல்லாத முறையில் நடந்து கொள்ள வேண்டுமென்றும் பாரபட்சம் காட்டக் கூடாதென்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

**பாகிஸ்தான் கவலை**

உத்தர பிரதேச வகுப்புக் கலகம் பற்றி பாக்கிஸ்தான் பெரும் கவலை கொண்டுள்ளதாக பாக்கிஸ்தான் வெளிவிவகார அமைச்சு இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பியுள்ள ஒரு குறிப்பில் தெரிவித்துள்ளது.

இந்தியாவிலுள்ள சிறுபான்மை மக்களின் பிரச்சினை பற்றி ஐ. நா வுக்கு கொண்டுசெல்ல வேண்டுமென்றும் பாக்கிஸ்தான் அதிகாரியொருவர் யோசனை தெரிவித்துள்ளார்.

## கென்னடி அதிருப்தி கொள்ளவில்லை?

வாஷிங்டன், அக் 9

சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு குரோமிகோவுடன் நடத்திய பேச்சுவார்த்தை பற்றி ஜனதிபதி கென்னடி அதிருப்தியடைந்திருப்பதாய்க் கூறப்படும் செய்தியை வெள்ளைமாளிகை மறுத்தது. திரு. கென்னடியுடன் நடத்திய சம்பாஷணை பற்றி தமது பிரதமருக்கு அறிவிப்பதற்காக திரு.குரோமிகோ மாஸ்கோ செல்லவிருக்கிருர். இதே சமயம் கிழக்கு ஜெர்மனியுடன் தனி சமாதான உடன்படிக்கை செய்துகொள்வதில் ரஷ்யா உறுதிகொண்டிருக்கிறது என சோவியத் உதவி பிரதமர் திரு. மிக்கோயன் தெரிவித்தார்.

## சிரியா மீண்டும் அங்கத்துவம் கோருகிறது

டமாஸ்கஸ், அக். 10

புதிய சிரியா அரசாங்கத்தை ஈராக் அரசாங்கமும், டுனீஷிய அரசாங்கமும் அங்கீகரித்துள்ளன. சிரியா அரசாங்கத்துடன் ராஜீய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள கிழக்கு ஜெர்மன் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

ஐ. நா. வில் சிரியாவுக்குள்ள அங்கத்துவத்தை மீண்டும் அளிக்குமாறு சிரியா குடியரசு ஐ. நா. ஸ்தாபனத்தை கோரியுள்ளது. மகாசபைத் தலைவருக்கு அனுப்பியுள்ள ஒரு தந்தியில் ஐ. நா. வில் அங்கத்துவம்கோரி சிரியா மனுச் செய்துள்ளது.

## தேசியசீனவின் தேசியதினம்

தைப்போ, அக். 10

தேசீய சீனவின் 15 வது வருடாந்த தேசீயதினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இத்தினத்தையொட்டி தேசீய சீன அதிபர் சியாங்கைஷேக்குக்கு அமெரிக்க அதிபர் கென்னடி ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

## லாவோஸ் அரசாங்கம் எப்பொழுது பதவியேற்கும்?

### இளவரசர்களுக்குள் உடன்பாடு ஏற்படவில்லை

லண்டன், அக். 10

லாவோசில் கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாகவும் நடுநிலைமைத் தலைவர் இளவரசர் சுவன்னபூமாவை பிரதம மந்திரியாகத் தெரிவு செய்வதென்றும் லாவோசின் முத்தரப்பு இளவரசர்களும் செய்துகொண்ட முடிவை பிரிட்டனும் அமெரிக்காவும் வரவேற்றன.

முத்தரப்பு இளவரசர்களும் கலப்பு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமாக உடன்பாட்டுக்கு வந்துள்ளது லாவோஸ் நிலைமையில் நம்பிக்கையளிப்பதாகவுள்ளது என்று பிரிட்டிஷ் வெளி விவகார இலாகா அதிகாரி தெரிவித்தார். ஆனல் இன்னும் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் சில உள்ளன என்றும் அந்த அதிகாரி கூறினர்.

இளவரசர்கள் செய்துகொண்ட உடன்பாடு லாவோசின் எதிர் காலத்துக்கு நம்பிக்கை அளிக்கிறது என்று வாஷிங்டனில் ராஜாங்க காரியாலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இளவரசர்கள் செய்துகொண்ட உடன்பாடு லாவோஸ் நெருக்கடியைத் தளர்த்திவிடும் என்று ஜெனிவாவில் லாவோசுக்கான சர்வதேசக் கமிஷன் மகாநாட்டில் கலந்துகொள்ளும் அமெரிக்க பிரதிநிதி திரு. அவரால் ஹரிமன் தெரிவித்தார்.

**உடன்பாடு கிட்டவில்லை**

லாவோசில் கலப்பு அரசாங்கம் அமைக்கவும் இந்த அரசாங்கத்தின் பிரதம மந்திரியாக இளவரசர் சுவன்னபூமா பதவியேற்க வேண்டுமென்றும் முடிவு செய்துகொண்ட இடதுசாரி, வலதுசாரி, நடுநிலைமைத் தலைவர்கள், கலப்பு அரசாங்கம் எப்பொழுது அமைப்பதென்பதுபற்றியோ பிரதம மந்திரி எப்பொழுது பதவியேற்க வேண்டுமென்பதுபற்றியோ உடன்பாட்டுக்கு வரத் தவறி விட்டனர்.

## நேரு திரும்பினர்

புதுடில்லி, அக். 9

தனது தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்ட பின் பிரதமர் நேரு புதுடில்லி திரும்பினர்.

## நான்கு இந்திய விமானங்கள்

### காங்கோவுக்கு புறப்பட்டன

ஆக்ரா, அக். 9

காங்கோவிலுள்ள ஐ. நா. படைகளுக்கு உதவி புரிவதற்காக இந்திய விமானப்படையைச் சேர்ந்த நான்கு கான்பரா விமானங்கள் இன்று ஆக்ராவிலிருந்து காங்கோவுக்குப் புறப்பட்டுச் சென்றன. இந்த விமானங்களில் ஐ. நா. அடையாளச் சின்னம் மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளது.

## தொழில் விருத்திக்கு மக்கள் ஆதரவு அவசியம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ் செய்திருக்கும் பிரிட்டனின் உதவி வர்த்தக கமிஷனர் திரு. ஜே. சி. சுலோமன் திங்கட்கிழமை அத்தியடி கே. ஜீ. தொழிற்சாலைக்குச் சென்று தீப்பெட்டி உற்பத்தியைப் பார்வையிட்டார்.

அங்கு விஜயஞ்செய்த கமிஷனரை தொழிற்சாலை அதிகாரிகள் வரவேற்று தொழிற்சாலையைக் காண்பித்தனர்.

அத் தொழிற்சாலையின் முன்னேற்றத்தைப் பாராட்டியதோடு இப்படியான தொழில் நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகம் தோன்றி நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்க உதவவேண்டுமென்றும் இத் தொழிற்சாலைக்குளுக மக்கள் நல்ல ஆதரவு அளிக்கவேண்டுமென்றும் கூறினர்.

# அங்கோலா முழுவதும் மீட்கப்பட்டுவிட்டதாம்

## போர்ச்சுக்கல் மார் தட்டுகிறது!

லிஸ்பன், அக். 9

அங்கோலா பூராவையும் தங்கள் துருப்புக்கள் மீட்டுவிட்டதாக, போர்ச்சுகல் அரசாங்க ராணுவ இலாகா நேற்றுத் தெரிவித்தது.

அங்கோலாவுக்குள் தேசிய ப்ாதிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக, காங்கோ, அங்கோலா எல்லையில் போர்ச்சுகல் துருப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும், லிஸ்பன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

மீட்கப்பட்ட பகுதிகளில் சிவில் அதிகாரிகள் மீண்டும் பதவி ஏற்றிருப்பதாகவும் இவ் வறிக்கை தெரிவிக்கிறது.

இந்தப் பகுதிகளிலிருந்து ஓட்டம் பிடித்த அகதிகள், பழைய இடங்களுக்குத் திரும்புவதில் அரசாங்கம் எதிர்பார்த்த அளவு துரிதம் காணப்படவில்லை என்றும் அது கூறுகிறது.

இந்த அகதிகள் சகஜமாகத் திரும்புவதற்கு வெளி நாடுகளில் சிரமங்கள் தோற்றுவிக்கப்படாது என்று எதிர்பார்ப்பதாகவும் அது குறிப்பிடுகிறது.

## மேனன் குணமடைகிருர்

நியுயோர்க் அக். 10

மூளைக்கு அருகில் இரத்தக் கட்டியொன்றை அகற்றுவதற்காக சத்திரசிகிச்சை செய்யப்பட்டபின் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. மேனன் குணமடைந்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

# மேற்கு ஈரியான் சுதந்திரம்பற்றி கமிஷன் ஆராயவேண்டும்

## டச் வெளிவிவகாரமந்திரி யோசனை

நியுயோர்க் அக். 10

மேற்கு ஈரியானுக்கு விரைவில் சுதந்திரம் வழங்குவது பற்றி சர்வ தேசக் கமிஷன் ஒன்று ஆராயவேண்டுமென நெதர்லன்ட்ஸ் வெளிவிவகார மந்திரி நேற்று ஐ. நா. மகாசபையில் பேசுகையில் யோசனை தெரிவித்தார்.

மேற்கு ஈரியானின் சமூக, பொருளாதார, கல்வி, அரசியல் நிலைபற்றியும் இக்கமிஷன் ஆராயவேண்டுமென்றும் நெதர்லன்ட்ஸ் வெளிவிவகார மந்திரி கூறினர். இக்கமிஷன் அடுத்த ஆண்டில் தனது அறிக்கையைச் சமர்ப்பித்துவிட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

மேற்கு ஈரியான் இந்தோனேஷியாவின் ஒரு பகுதியென்றும் அதை இந்தோனேஷியாவுக்குத் திருப்பிக் கொடுத்துவிடவேண்டுமென்றும் கோரி வரும் இந்தோனேஷிய வெளிவிவகார மந்திரி டாக்டர் சுபந்திரியோ நெதர்லன்ட்ஸின் இந்த யோசனையைக் கண்டித்தார். மேற்கு ஈரியான் சம்பந்தமாக நெதர்லன்ட்ஸுடன் பேச்சு வார்த்தை நடத்த இந்தோனேஷியா எப்பொழுதும் தயாராக இருக்கிறதென்றும் அவர் கூறினர்.

## நிவாரண நிதிபற்றி கண்காணிப்பு

கொழும்பு, செவ்வாய்

ஏழைகளுக்கு வழங்கப்படும் மாதாந்த நிவாரணப் படிச் சம்பளத்தை சம்பளம் பெற உரிமையற்றவர்கள் பெறுவதைத் தடைசெய்யசமுகசேவை இலாகா தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வருடம் 20,000 க்ஷய நோயாளர்களுக்குச் சமூக சேவை இலாகா நிவாரண உதவி வழங்கும். இதற்கென ரூ 9,750,000 ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நோயாளரும் மாதமொன்றுக்கு ரூ. 20 பெறுவர்.

## உகண்டாவுக்கு பூரண சுதந்திரம்

லண்டன், அக். 10

மற்றொரு ஆபிரிக்க காலனி நாடான உகண்டா அடுத்த வருடம் பூரண சுதந்திரம் பெறும் என்று நேற்று இங்கு அறிவிக்கப்பட்டது. அடுத்த வருடம் மார்ச் மாதத்தில் உள்நாட்டு நிர்வாகப் பொறுப்பு ஒப்படைக்கப்படும். பின்னர் பொதுத் தேர்தல் நடைபெற்று ஆட்சிப்பொறுப்பு பூரணமாக ஒப்படைக்கப்படும்.

## மன்னர் முகாம் சீர்கேடு

### உடுப்பிட்டி எம். பி. பார்வையிட்டார்

மன்னர், திங்கள்

உடுப்பிட்டி எம். பீ. திரு. எம். சிவசிதம்பரம் சமீபத்தில் மன்னருக்கு விஜயம் செய்து அங்குள்ள தடுப்புக்காவல் முகாமில் அவதிப்படும் மக்களைப் பார்வையிட்டார்.

சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள் என்ற சந்தேகத்தின்மீது சுமார் முன்னூற்றுக்கும் அதிகமானவர்கள் இந்த முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனா.

## மாநகரசபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 13-ம் திகதி மாலை 4 மணிக்கு நடை பெறவிருக்கிறது.

### மணி வாக்கு

வானிடிந்து வீழ்ந்த போதிலும், நாம் உண்மையைப் பின்பற்றவேண்டும்.

—காந்திஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 25 உ (11-10-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## இலங்கை – இந்தியா பேச்சுகள்

கூடிய சீக்கிரத்தில் இலங்கை இந்திய பேச்சுகள் நடைபெறப்போவதாக வெளியான செய்தி, இங்குள்ள சுமார் 8 லட்சம் "நாடற்றவர்"களுக்கும் புதிய நம்பிக்கை அளிப்பதாகும்.

1954-ம் வருடம் டில்லியில் நடந்த பேச்சுகளுக்குப்பிறகு இங்குள்ள இந்திய வம்சாவழிகளின் நிலைமை மோசமடைந்தது. இங்கு அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. வரி வேற்றுமை புதிதாகப் புகுத்தப்பட்டுள்ளது. கள்ளத் தோணிகள் என்று எந்தச் சமயமும் அவர்களைப் பிடித்து சிறைப்படுத்தக் கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. தங்கள் குறைகளைப் பற்றி முறையிட்டு, நியாயம் பெற அவர்கள் எந்த அரசாங்கத்தையும் அணுகமுடியாதபடி திரிசங்கு சுவர்க்கத்திலே அரசியல் அனாதைகளாக இருக்கின்றார்கள். நாளாக ஆக நிலைமை மோசமாகி பிரச்னை முற்றுவதால், இதற்குக் கூடிய சீக்கிரம் ஒரு சமரச முடிவு காணப்படவேண்டும்.

எவ்வளவு பேர்களை இந்தியா திருப்பி அழைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறது? இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லத் தயாரா இருப்பவர்களுக்கு எவ்விதமான தூண்டுதல்களை இலங்கை அளிக்க வேண்டும்? என்ற இவற்றை அடிப்படையாகக் கொண்டே இப்பிரச்னைக்கு ஒரு புதிய தீர்வைக் காணலாமென்று கூறப்படுகிறது.

தாங்களாக இஷ்டப்பட்டு இந்தியா திரும்ப விரும்பும் நாடற்றவர்கள் அனைவரையும் இந்தியா அழைத்துக்கொள்வதாக ஏற்கெனவே நேருஜி உறுதிகூறியிருக்கின்றார். மறைமுகமான நிர்ப்பந்தங்கள் செய்து, இலங்கையை விட்டு யாரையும் வெளியேற்றுவதாயின், அவர்களை ஏற்கமுடியாதென்று இந்தியா தெரிவித்துள்ளது. இலங்கையில் இன்றுள்ள நாடற்றவர்களில் எவ்வளவு பேர் உதவி கிடைத்தால் இலங்கையை விட்டு இந்தியா திரும்பத் தயாராக இருக்கிறார்கள் என்பது இரு அரசாங்கங்களுக்கும் திட்டமாகத் தெரியாது. இதில் ஒவ்வொருவர் பிரச்னையும் வெவ்வேறு விதமாக இருக்கும். இவ்வித நிலையில் எவ்வளவு பேர்களைத் திருப்பி அனுப்புவது என்ற அடிப்படையில் பேச்சுகளை எப்படி நடத்த முடியும்?

இது மனிதர்களைப்பற்றிய பிரச்னையென்றும் மனிதாபிமானத்துடனேயே இதைத்தீர்க்க வேண்டுமென்று இரு தரப்பினரும் உணர்ந்திருக்கிறார்கள். கட்டாய முறைகளைக் கையாண்டு, யாரையும் நாடுகடத்துவதென்பது முடியாது. ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை இரு அரசாங்கங்களும் ஒப்புக்கொண்டால், கட்டாயமாக அவர்களை, இஷ்டப்பட்டாலும் படாவிடினும், நாடுகடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படக்கூடும். இவ்வித கட்டாயம் சம்பந்தப்பட்டவர்களுக்கு பெரும் இம்சையாகுமாதலால் எண்ணிக்கையைப்பற்றி முதலிலேயே தீர்மானிப்பதென்பது முடியாத காரியம்.

சலுகைகளையும் தூண்டுதல்களையும் அறிவித்து, தாராளப் பான்மையுடன் அவற்றை அமுல் நடத்துவதாயின், தாங்களாகவே இந்தியப் பிரஜைகளாகப் பதிவுசெய்துகொள்ள பலர் முன்வரக்கூடும். ஒரு திகதியைக் குறிப்பிட்டுவிட்டு அத்திகதிக்குள் இந்தியப் பிரஜைகளாகிறவர்களை அப்படியே பதிவுசெய்து நாடற்றவரில் மற்றவர்களை, இந்நாட்டில் பிரஜைகளாக சரிசமமாக வாழ வழிசெய்ய வேண்டும். அவர்களுக்கு அடையாளச் சீட்டுகள் வழங்கி, அவர்களை மீண்டும் அரசியல் அனாதைகளாக்குவது, இப்பிரச்னையைத் தீர்க்கமுடியாது. மனிதாபிமானமும், விரிந்த மனமும், பரந்த அரசியல் ஞானமுமே இப்போது வேண்டும். இரு நாட்டு பிரதமர்களிடையிலேயும் நல்ல உறவுகள் இருப்பதால், இப்பிரச்னை சுமுகமாக நட்புமுறையில் தீரவும், அந்த எட்டு லட்சம் துரதிருஷ்ட மக்களுக்கும் சீக்கிரத்தில் விமோசனம் பிறக்கவும் கூடுமென்று நம்பலாமா?

# யாழ்ப்பாண மக்களின் சிக்கன வாழ்க்கை

## மேனாட்டினர் பாராட்டுகின்றனர்

**யாழ்ப்பாண மக்களை வெளிநாட்டினர் ஸ்கொட்லாந்து மக்களுடன் ஒப்பிடுவதுண்டு. ஸ்கொட்லாந்து மக்களைப் போல யாழ்ப்பாண மக்களும் சிக்கன வாழ்க்கையை மேற்கொண்டிருப்பதும் இதற்கு ஒரு காரணமாகும். இவற்றையெல்லாம் பத்திரிகைத் தொழிலில் அனுபவம் வாய்ந்த ஒருவர் இக் கட்டுரையில் தந்துள்ளார்.**

ஐம்பத்தாறு வருட காலமாக எனக்குப் பத்திரிகைத் தொழிலில் ஈடுபாடு உண்டு. என் வாழ்வு முழுவதிலும் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளேன் எனக் கூறினால் அது மிகையாகாது. இந்த உன்னதமான தொழில் எனக்குப் பல்வேறு தேசங்களுக்குச் செல்லவும் பல்வேறு மக்களுடன் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பளித்தது. பலவிதமான மக்களுடனும் பழகுவதற்குச் சந்தர்ப்பம அளித்தால் பத்திரிகைத் தொழில் ஒரு தனிப்பட்ட துறையாக அமைந்துவிடுகிறதெனலாம். எனது வயோதிப காலத்துக் குறைபாடுகளுக்கு ஈடு செய்வது போல இறைவன் எனக்குப் பத்திரிகைத் தொழில் ஆற்றலை அளித்துள்ளான்.

மக்கள் மக்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதையும் நான் மக்களைப்பற்றி என்ன நினைக்கிறேன் என்பதையும் மக்கள் அனைவருக்கும் கூறிவிடுவதற்கு எனக்கு இயற்கையாகவே கொடுக்கப்பட்டுள்ள இந்தஆற்றல் எனது வயோதிபக்குறைகளைநிவர்த்தி செய்ய ஈடாகின்றது.

இத்தகைய பத்திரிகைத் தொழிலுக்கு ஸ்கொத்லாந்து தேசக் கவிஞர் ரொபேர்ட் பேர்ன்ஸ் பெருமதிப்புக் கொடுத்தார். தமது கவிதையொன்றில் "பிறர் நம்மை நோக்குவது போலவே நாமும் நம்மை நோக்குவோமானால் அது எமக்கு இறைவன் ஈந்த வரப்பிரசாதமேயாகும்" என்று கூறியுள்ளார். இச் சிறு கட்டுரையில் என்னைப்போன்ற பிற நாட்டவர்கள் யாழ்ப்பாணத்து மக்களைப்பற்றி என்ன கருதுகின்றார்கள் என்பது பற்றி மட்டும் கூறுகின்றேன்.

யாழ்ப்பாணத் தமிழ் மக்கள், இங்கிலாந்திலுள்ள ஸ்கொட்லாந்து மக்களைப் போன்றவர்கள் என நயமாக வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். ஸ்கொட்லாந்து மக்களுக்கும் யாழ்ப்பாணத் தமிழ் மக்களுக்கும் சிக்கன வாழ்வு பொதுப் பண்பாகும். இதன் காரணமாகவே அவ்வாறு வர்ணித்துள்ளார்கள். சிக்கனம் ஒரு நல்லதர்மம் என்பதை மறுக்க முடியாது. சிக்கனம் ஒரு வகையான முன் அறிவுத் தன்மையாகும். எதிர்காலத்திற்குப் பாதுகாப்பும், எதிர்காலத்தில் நம்பிக்கையும் வைத்திருக்கச் செய்வதுமாகும். பணத்திற்கு இவ்வகையான மதிப்புக் கொடுக்கும் திறனாலேயே யாழ்ப்பாண மக்கள் மேம்பாடுடையவர்களாக விளங்குகிறார்கள்.

இதனால் யாழ்ப்பாணத்து மக்கள் தமது சௌகரியங்களையும் தம்மை நம்பி வாழ்பவர்களது சௌகரியங்களையும் இழந்து விடுகிறார்கள் என்பதற்கில்லை. சமுதாயத்தில் தமக்குரியஸ்தானங்களிற்கேற்ப அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். வாழ்க்கையிலுள்ள சாதாரண இன்பங்களை அவர்கள் போதிய அளவுக்கு அனுபவித்து வருகிறார்கள். சில சமயங்களில் மிதமிஞ்சியும் அனுபவிக்கிறார்கள். ஆனால் அவர்கள் தமது பண வருவாய்க்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் என்பதை எப்பொழுதும் மனதில் வைத்துக் கொள்வார்கள்.

இது என்னுடைய அபிப்பிராயம் மட்டுமல்ல. பண்பாடுகள் நிறைந்த எத்தனையோ அந்நிய தேசத்தவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வந்தும் யாழ்ப்பாண மக்களுடன் பழகியும் இருக்கிறார்கள். இத்தகைய பலருடன் சம்பாஷித்ததன் பேரில் யாழ்ப்பாண மக்களிடம் எதுவித்தமான உலோபத்தனமும் இல்லை என்பதை இவர்கள் கூற நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஜோர்ஜ் எலியட் என்பவர் தமது "சைலாஸ் மார்னர்" என்னும் ஆங்கில நாவலில் நிந்தித்துக் கூறும் "உலோபத்தனம்" போன்ற பண்பு யாழ்ப்பாண மக்களிடையே இல்லை. பிறநாட்டவர்கள் பலர் யாழ்ப்பாண மக்களுடைய பண்புகளை நன்கு ஆராய்ந்தறிந்ததின் பயனாக யாழ்ப்பாண மக்கள் தமக்கெனத் தேர்ந்தெடுத்துக் கொண்ட சிக்கனப் பண்பு புலனாகியுள்ளது. இந்த நற்பண்பையிட்டு யாழ்ப்பாண மக்கள் பெருமைப்பட வேண்டும்.

ஒலிவர் கோல்ட்ஸ்மித் என்னும் ஸ்கொட்லாந்து தேசக் கவிஞர் தமது நூல் ஒன்றில் பின்வருமாறு கூறியுள்ளார். உலோபிகள், செல்வத்துள் இருந்து கொள்ளும் இன்பங்கள் யாவற்றையும் இழந்து விடும் பயித்தியக்காரர்களாவார்கள். இவர்கள் வேண்டாதவற்றையும்கற்பனைசெய்து அக் கற்பனைத் தேவைகளை அத்தியாவசிய தேவைகளென எண்ணிவிடுகிறார்கள்...... அறிவில்லாதவர்களும் வீண் வார்த்தை பேசுவோர்களும் எதைச் சொன்னாலும் எம்மிடையே பலருக்குச் சிக்கனத்திற்கும், ஊதாரித்தனத்திற்கும், வேறுபாடு தெரியும். சிக்கனமுடையவர்களே சமுகத்துக்கு உதவுபவர்கள்.

எனவே, பிறநாட்டவர்கள் யாழ்ப்பாணத்து மக்களை ஸ்கொட்லாந்து மக்களுடன்ஒப்பிடும் போது, யாழ்ப்பாண மக்கள் சிக்கன வாழ்வு வாழ்கிறார்கள் என்றும், அதனால் மதிப்புக்குரிய சமுக வாழ்க்கையை அவர்கள் தவிர்த்துவிடவில்லை என்பதும் நன்கு புலனாகின்றது.

யாழ்ப்பாணம் சென்றுள்ள பிற நாட்டவர்களிடமிருந்து யாழ்ப்பாண மக்களைப் பற்றிய இன்னுமொரு சிறப்பையும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். வடமாகாணத்திலுள்ள தமிழர் யாவரும் சமுக சேவைகள் அனைத்திலும் முழுமனத்துடன் பங்கு பற்றிக்கொள்வார்கள். இத்தகைய கொண்டாட்டங்கள் சமுகத்தில் இல்லாதுவிடின் வாழ்க்கையே வெறுப்புத்தட்டிவிடும். இக் கொண்டாட்டங்களே இவர்களது வாழ்க்கையைக் கோலாகலப்படுத்திச் சோபிக்கச் செய்கின்றது.

யாழ்ப்பாணத்தில் இரண்டு வருட காலம் வாழ்ந்து தினமும் யாழ்ப்பாண மக்களுடன் பழகியதால் யாழ்ப்பாண மக்கள் நல்ல நகைச்சுவையுடையவர்கள் என்பதை நான் அறிவேன். உண்மையான மதிப்புள்ள இன்பங்களை அவர்கள் விரும்புபவர்கள். வீண்செலவு செய்வதை அவர்கள் வெறுப்பவர்கள் என்பதையும் நான் நன்கு அறிந்து கொண்டேன்.

## சீனவின் உற்சாகம் இலங்கையில் இல்லை

கண்டி, செவ்வாய்

'சீனவில் ஒரு பகுதியிலாவது மக்கள் வேலைசெய்யும்படி வற்புறுத்தப்படுவதை நான் பார்க்கவில்லை.

அங்குள்ள சாதாரணமனிதர் ஒவ்வொருவரும் உற்சாகத்துடன் வேலை செய்தார்கள். இதனால் சீன தனது அபிவிருத்தியில் முன்னேற்றமடைந்து வருகிறது.'

இவ்வாறு சீனவில் முன்னர் ஸ்தானிகராகக் கடமையாற்றிய திரு. வில்மட் ஏ. பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் இவ்வித உற்சாகம் மக்களிடையே குறைவாகவே காணப்படுகிறது. இதனால் இலங்கையின் சமுக முன்னேற்றமும் பொருளாதார முன்னேற்றமும் பாதிக்கப்படுகின்றன.

## உதவிப்பணம் அதிகரிக்கும்

கொழும்பு, செவ்வாய்

கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமது கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடக் கட்டடங்களைத் திருத்துவதற்கும் புதிய பள்ளிக்கூடங்களை அமைப்பதற்கும் அரசாங்கம் உதவிவரும் பணத்தின் தொகையை அதிகரிக்குமாறு கைத்தொழில் உள்நாட்டுக்கலாச்சார அமைச்சு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும்.

## ஐயாறன் எழுதுவது

"ஆலயங்களிலே அர்ச்சகர்களை வெறும் சேவகர்களாகப் பாவிக்காமல், மதிப்புக்குரியவர்களாக அதிகாரிகள் கருத வேண்டும்".

என்று சமீபத்தில் சென்னையிலே நடைபெற்ற தென்னிந்திய அர்ச்சகர் சங்க மகாநாடு முதல் தீர்மானமாக நிறைவேற்றியுள்ளதைப் பார்த்தேன். இதுபற்றி ஒரு கோவில் குருக்களிடம் பேசியபோது, அவர் சொன்னார்," குருக்கள்மார்களுக்கு சில கோவில்களில் மாதச் சம்பளம் கொடுக்கிறார்கள். இப்படிச் சம்பளம் பெற்று பூசை செய்வது ஆகம சாஸ்திரங்களுக்கு மாறாகும். சம்பளத்துக்காக பூஜை செய்பவர்களை சாதாரணமாக பிறர் மதிப்பதில்லை. முன் காலத்தில் பல கோவில்களிலும் பூஜை செய்பவர்களுக்கு பரம்பரை மான்யமுண்டு. அவர்கள் கண்ணியமாகவும் நிம்மதியாகவும் இருந்து பூஜை செய்துவர முடிந்தது. ஆனால் இக்காலத்தில் அந்தமுறை அநேகமாக மறைந்துவிட்டது. இந்தச்சம்பளமுறை மாறி மீண்டும் பரம்பரை மான்யமுறை ஏற்பட்டாலே குருக்கள்மார்களின் மதிப்பு உயரவும், கோவில்களில் பூசை மேலாக நடைபெறவும் முடியும். இன்றேல் சம்பளத்துக்குப் பதில், கோவில் சன்னதிகளில் கிடைக்கும் தட்சணை முதலிய வருமானங்களை அர்ச்சகர்களுக்கே விட்டுவிடவேண்டும்" என்றார். இவ்விஷயம் சில கோவில்களில் நடப்பதாக அறிந்தேன்.

* * *

முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன் என்றார் சுந்தரமூர்த்திசுவாமிகள். ஆனால் இக்காலத்தில், குருக்கள்மார்களில் பலர், பிறருக்கு சம்பள அடிமைகளாகியுள்ளனர். இது பெரிய துரதிருஷ்டம்.

கூலிக்கு மாரடிப்பதுபோலில்லாமல், எந்தக்கோவிலில் குருக்கள்மார் பக்தியுடனே உருக்கமாக பூஜை வழிபாடு செய்கிறார்களோ அந்தக்கோவிலில் அருள்சக்தி நிறைந்திருக்கும். குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே என்று வசனமுமுண்டு.

ஒவ்வொருவர் மதிப்பும் அவரவர் ஆசார அனுஷ்டானத்திலும் பக்தியிலும் நெறியான வாழ்விலும்தான் அடங்கியுள்ளது. மதிப்பின் ரகசியம் இதுவே. கேவலம் பணத்திலோ, பதவியிலோ, குலத்திலோ இல்லை என்பதை அன்றாட வாழ்க்கையிலே நாம் பார்க்கலாம்.

* * *

மதுரையிலே சென்றவாரத்தில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசர் ஆலயத்தில், "திருமுறை" வழிபாட்டை அறநிலை பாதுகாப்பு அமைச்சர் பக்தவத்ஸலம் ஆரம்பித்துவைத்தது பெரியதோர் புரட்சிகரமான மாறுதலாகும்.

ஆகம முறைப்படி நடக்கும் வழிபாட்டுடனே, தமிழிலும் இஷ்டப்பட்டவர்களுக்காக அர்ச்சனை செய்ய அனுமதித்திருக்கிறார்கள்.

இதுபற்றி சென்ற சில வருடங்களாகக் கிளர்ச்சி நடந்தது. தமிழ் அர்ச்சனை என்பதற்குப்பதில் "திருமுறை அர்ச்சனை" என்று பெயரை மாற்றியதுடன் இது சமரசமாக முடிந்துள்ளது பெரிய காரியம்.

* * *

இந்த மாறுதலும்கூட அவன் செயல் என்றே ஆஸ்திகர் கொள்வர். பொருள் உணர்ந்து செய்யும் வழிபாட்டுக்கு அதிக பலனுண்டு. அதைவிட பக்தியே முக்கியம். பக்தி அதாவது அன்புடன் கண்ணப்பன் செய்த பூசைக்கு ஆறேநாளில் ஆண்டவன் அருள் செய்துவில்லானல்லவா?

# "மோட்டார் கார் அல்ல மோட்டார் கோச்"!

## ஏழுபேருக்கு அதிகமாக பிரயாணிகளை ஏற்றியதாக வழக்கு

### வழக்கறிஞர் சிவசிதம்பரம் விளக்கம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

1961-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் திகதி யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியால் 3 ஸ்ரீ 4501 இலக்கமுள்ள தனிப்பட்டவர் காரில் 11 மேலதிகப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்றதாகவும் இப்படியான வாகனங்கள் ஓட்டிச் செல்வதற்கான லைசென்ஸ் இல்லாமல் அதனை ஓட்டிச் சென்றதாகவும் கரவெட்டி நெல்லியடியைச் சேர்ந்த தம்பு விக்கிரமசிங்கம் என்பவர் மீது குற்றஞ்சாட்டி பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். டி. ஜி. பீட்டரினால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

பொலிஸ் சார்ஜண்ட் திரு. பொன்னுக்கோன் வழக்கை நடத்தினர்.

எதிரி சார்பில் அட்வக்கேட் எம். சிவசிதம்பரம் திருவாளர்கள் ஏ. அமிர்தலிங்கம், ஜிம்மி இராசரத்தினம் ஆகியோரது அனுசரணையுடன் ஆஜராயிருந்தார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பீட்டர் அட்வக்கேட் திரு. சிவசிதம்பரத்தின் குறுக்கு விசாரணைகளுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது:-

குறிப்பிட்ட வாகனத்தில் 18 பிரயாணிகள் இருந்தனர். 11 பேர் மேலதிகமாகவிருந்தனர். புதிய திருத்தப்பட்ட விதிகளின்படி தனிப்பட்டவர் கார்களில் 7 பேருக்குத்தான் அனுமதியுண்டு. அந்த வாகனத்தில் பிரயாணஞ்செய்த எந்த ஒரு பிரயாணியினதும் பெயரையோ விலாசத்தையோ நான் குறித்துக்கொள்ளவில்லை. நான் பிரயாணிகளை பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லவோ அவர்களிடமிருந்து முறைப்பாடுகள் எதையுமோ எடுக்கவில்லை.

அந்த வாகனத்தில் ஆசனங்கள் ஒன்றன்பின் ஒன்ருகக் ஆக்கப்பட்டிருக்கின்றன. அதற்குள் மூன்று நீளமான ஆசனங்கள் இருக்கின்றன. விட்டு வீதியாக ஒவ்வொன்றிலும் இருவரும் நெருக்கடியாக மூவரும் அமரலாம். சாரதிக்கருகிலும் ஒருவருக்கு ஆசனமுண்டு. இதைவிட இரண்டு மூன்று தனியாசனங்களும் இருக்கின்றன. ஒன்பது பேருக்கு ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அதிக பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கான இடவசதி மோட்டார் வானில் இருக்கிறது. 7 பிரயாணிகளுக்குமேல் கொண்டுசெல்லக்கூடிய ஆசனங்கள் அந்த மோட்டார் வானில் உண்டு.

பணத்துக்கோ அன்றி வெகுமதிக்கோ ஆட்களை ஏற்றிச் செல்ல லைசென்ஸ் இல்லாத எந்த மோட்டார் வாகனமும் தனிப்பட்டவர் காராகக்கருதப்படும். மோட்டார் வாகனப் பதிவுக்கெனப் பிரத்தியேகப் பாரங்கள் எதுவுமிருப்பதாக எனக்குத் தெரியாது.

இதன்பின் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆர். ஏ. ஓ. விக்கிரமசிங்கி, கார் சொந்தக்காரர் சின்னப்பொடி வல்லிபுரம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். இத்துடன் முடிக்குரிய தரப்பு சாட்சியங்கள் முடிவுற்றன.

எதிரி தரப்பு வழக்கறிஞர் திரு. சிவசிதம்பரம் கோர்ட்டாரிடம் சில சட்டப்பிரச்சினைகளை எடுத்து வாதாடியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

முடிக்குரிய தரப்பு சாட்சியங்களிலிருந்து குறிப்பிட்ட வாகனத்தில் 8 பேர்களுக்குமேல் ஏற்றிச்செல்லக் கூடியதாக அவ்வாகனம் செய்யப்பட்டிருக்கிறது தெளிவாகிறது. இந்த வாகனம் ஒரு "மோட்டார்கார்" அல்ல அது ஒரு "மோட்டார் கோச்" என்பது இன்ஸ்பெக்டரின் சாட்சியத்தின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இந்த வாகனத்தின் சொந்தக்காரரோ அன்றி சாரதியோ இந்த வாகனத்தை "மோட்டார் கார்" எனப்பதிவு செய்யுமாறு விண்ணப்பித்திருக்கிறார்களென்பதற்கு சாட்சியமெதுவும் இல்லை.

இவ்வழக்கில் தீர்ப்புச்சொல்லுவதை மாஜிஸ்டிரேட் இம்மாதம் 30-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

---

## யாழ்ப்பாணத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிற்சாலைகளை நிறுவி சேவை செய்தால் மக்கள் பயனடைவதோடு இம் முயற்சிகளுக்கு மாநகர சபை ஊக்கமளித்து உதவி செய்யுமென்றும் அவர் தொடர்ந்து கூறினர்.

இம் முயற்சிக்கு மற்றைய ஸ்தலஸ்தாபனச் சபைகளின் உதவியையும் பெறுவதற்கு மேயர் முயற்சிகள் மேற்கொள்ளவிருக்கிறார்.

இந்நடவடிக்கைத் திட்டங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்ட கமிஷனர் மிகவிரைவில் இத் திட்டத்தை பூர்த்தி செய்வதாக மேயருக்கு உறுதியளித்திருப்பதாகத் தெரிகிறது.

# "அன்பு அருளை வளர்க்கிறது"

## அருள்நெறி விழாவில் பண்டிதமணி கருத்து

மாவிட்டபுரம், செவ்வாய்

அறிவு என்கின்ற சுடர் நீதி எது. அநீதி எது, என்பதை வகுத்துக் காட்டும் இந்தப் பகுத்தறிவு கொண்டு நீதியில் அன்பு செய்யப் பயில வேண்டும். நீதி என்ற பயிர் அன்பு என்கின்ற மழையால் செழித்தோங்கி வளர வேண்டும். அந்த நீதி ஒருநாள் அருளாகத்தோன்றிச் சீவர்களைச் சிவமாக்கும். இந்த நீதியை கண்டு பிடிக்கும் நெறிதான் அருள் நெறி."

இவ்வாறு பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை, மாவை-கொல்லங்கலட்டி அருள்நெறிக் கழகத்தின் மூன்ருவது ஆண்டு நிறைவு விழாவுக்கு அனுப்பிய தமது ஆசிச் செய்தியிற் குறிப்பிட்டிருந்தார்.

இக்கழகத்தின் ஆண்டுநிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் சென்ற திங்கட்கிழமை மாலை கொல்லங்கலட்டி சைவ வித்தியாசாலையில் நடைபெற்றது. கழகத் தலைவர் திரு. வ. சரவணமுத்து ஜே. பி. தலைமை வகித்தார்.

மாணவிகளின் கூட்டு வழிபாட்டுடன் விழா ஆரம்பமாயிற்று. செல்வி விமலாதேவி அனைவரையும் வரவேற்று உரை நிகழ்த்தினர்.

நால்வர் காட்டிய நெறியே அருள் நெறியெனவும், அன்பு அருளாக மலரும்போது வாழ்க்கைய புனிதமடைந்துவிடுகின்றதெனவும் ஆசிரியர் திரு. இராஜ. அரியரத்தினம் தமது உரையிற் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

" நடமாடும் தெய்வங்களாகிய செல்வக் குழந்தைகளின் உள்ளங்களில் இறைவன் உறைகின்ருன். மக்கள் அனைவரும் குழந்தை உள்ளம் படைத்தவர்களாக இருந்துவிட்டால் உலகத்திலே சண்டை சச்சரவுகளுக்கே இடமிராது. அன்பு வாழ்க்கை மலரும்போது 'போர்' என்ற பேச்சே எழ முடியாது.

"நால்வர் காட்டிய நன்னெறிதான் அருள் நெறி அன்பும், கருணையும் அருள் உள்ளம் உலகத்தலைவர்களிடையே ஏற்படுமானல் இப்பூலோகமே கைலாசமாகிவிடும்.

விஞ்ஞானம் விதம்விதமான விந்தைகளைக் காட்டினலும் அறத்தை அடிப்படையாகக் கொண்ட செயல்கள் தாம் உலகை ஈடேற்ற முடியும். அன்பாலும் அருளாலும் உலகை வெல்ல முடியும் என்பதை அஹிம்சா மூர்த்தியாகிய காந்திஜி உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளார். சிவநேயச் செல்வர்கள் காட்டிய வழிதான் அருள் வழி." திருமதி க. திருநாவுக்கரசு பரிசில்களை வழங்கினர். பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை அனைவருக்கும் நன்றி கூறினர். ஆண்டறிக்கையை செயலாளர் திரு. சி. சிவமகாராசா சமர்ப்பித்தார். சிறுவர்களின் ஆடல் பாடல்களுடன் விழா நிறைவேறியது.

---

## மலேரியா தடுப்பு

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில்எவ்விதம் மலேரியா பரவாது தடுக்கப்படுகிறது என்பதை அறிவதற்காக இந்தோனீஷியாவின் தேசிய மலேரியாதடுப்புச் சேவையின் டைரக்டர் டாக்டர் அசில் ஹிட்ஜாப் குசுமா இலங்கை வந்துள்ளார்.

---

## 'தேசியகீதம் பொய்யின் பிரதிபிம்பம்'

மகாரகம, செவ்வாய்

"எமது தேசிய கீதம் பொய்யின் ஒரு பிரதிபிம்பம். எமது நாட்டில் உண்மையாக நடப்பவைகளுக்கு எதிர்மாருன காட்சியொன்றை அது எதிரொலி செய்கின்றது."

இவ்வாறு தம்பாபண்ணை நுண்கலைக் கல்லூரி டைரக்டரான திரு. பிரேமகுமார எப்பிட்டவெல்ல, தெஹிவலை, கல்கிசை சமுகசேவை வாலிபர் மன்றத்தின் இரண்டாவது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

பொய்யில் ஆரம்பமாகி முடிவுறும் எதுவும் கவிழ்ந்து போவது திண்ணம். இந்த நிலைமையே எமது நாட்டுக்கு இன்று ஏற்பட்டுள்ளது.

"தேசிய கீதத்தின் ஒரு அடியில், எமது நாட்டில் நெல்வளமும் சகல தானிய வளமும் காய்கனி மலர்கள் வளமும் நிறைந்து காணபபடுகின்றது என்க்கூறப்பட்டுள்ளது. எமது தேசிய கீதம் என்னதான் கூறினலும் சீனவிலிருந்தும் மற்றைய நாடுகளிலிருந்தும் அரிசி இறக்குமதி செய்யாவிட்டால் எமது நாட்டு மக்கள் பசியால் இறக்கவேண்டியதுதான்."

---

## சங்க கூட்டத்தில் 3 பேர் காயம்

கொழும்பு, செவ்வாய்

சாமர்ஸ் குதத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற கூட்டுறவு தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டத்தில் ஏற்பட்ட கலகத்தின் காரணமாக 3 பேர் காயமடைந்தனர்.

சங்கக் காரியதரிசி அறிக்கையை வாசிக்கையிலேயே இந்தக் கலகம் மூண்டது. அறிக்கையில் குறிப்பிட்டிருந்த சில விஷயங்களில் அங்கத்தவர் ஒருவர் ஆட்சேபனை தெரிவிக்கும் நோக்கமாக காரியதரிசியை நோக்கி கதிரை வியைட்டெறிந்தார்.

எம். ஈ. பி., கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய இரு கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தவர்களுக்கிடையில் சண்டை மூண்டதன் காரணமாக கலகம் வலுவடைந்ததனல் பொலிஸார் வந்து அமைதியை நிலைநாட்டவேண்டி நேர்ந்தது. காயமடைந்தவர்களை பொலிஸார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர்.

---

# தீக்கிரையான வாதரவத்த பாடசாலை புனரமைப்பு

## ஆசிரியரும் மாணவர்களும் 3 தினங்களில் கட்டி முடித்தனர்

பருத்தித்துறை, செவ்வாய்

தீக்கிரையான ஒரு பாடசாலையை மீண்டும் கட்டுவதற்கான திட்டத்தை ஆசிரியர்களும் மாணவர்களும் சாரணர்களும் மேற்கொண்ட நிகழ்ச்சி வாதரவத்தையில் பெரும் ஆரவாரத்துடன் நடைபெற்றது.

பாடசாலையை புதிதாக அமைக்கும் வேலையை காரியாதிகாரி திரு. ஜே. ஜே. டி. சபாபதிப்பிள்ளை சென்ற வியாழக்கிழமை ஆரம்பித்துவைத்தார். மூன்று தினங்களில் வேலை முடிவடைந்தது.

திரு. எஸ். கந்தமூர்த்தி பாடசாலையை புதிதாக அமைக்கும் வேலையை ஆரம்பித்து வைக்குமாறு காரியாதிகாரியைக் கேட்டுக்கொண்டர்.

கிராம முன்னேற்றச் சங்கக் காரியதரிசி திரு. வி.செல்லையா பேசுகையில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 29ந் திகதி வாதரவத்தை பாடசாலை தீக்கிரையானதால் 300 பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று படிக்கமுடியாது போய்விட்டதென்றும் கல்வி இலாகாவுக்கு இதுபற்றித் தெரிவித்தபோதிலும் பணம் இல்லையென்ற காரணத்தினல் முயற்சி வெற்றியளிக்க முடியவில்லையென்றும் கூறினர்.

---

## சப் போஸ்ட்மாஸ்டர்களுக்கு

### மந்திரி பாராட்டு

கொழும்பு, செவ்வாய்

"சப் போஸ்ட்மாஸ்டர்கள் கிராம மக்களுடன் அதிகம் நெருங்கிப்பழகி அவர்களுடைய தேவைகளை நன்கு அறிந்துள்ளனர்.

மக்களின் ஆதரவைப் பெற அவர்கள் அரசாங்கத்துக்கும் விசுவாசமாக இருந்துவந்துள்ளார்கள்."

இவ்வாறு போக்குவரத்து மந்திரி திரு. பி. பி. ஜி. கலுகல்லே கொழும்பில் நடைபெற்ற சப் போஸ்ட்மாஸ்டர் தேசிய சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

உதவி சப் போஸ்ட்மாஸ்டர்கள் விடுத்துள்ள கோரிக்கைகள் நியாயமானவை என்றும் அவைகள் வழங்கப்படல்வேண்டும் என்றும் திரு. கலுகல்லே தொடர்ந்து பேசுகையில் கூறினர். அவர் மேலும் கூறியதாவது:

ஆசிரியர்கள், ஆயுள்வேத வைத்தியர்கள் ஆகியோர் எஸ். எல். எப். பி. அரசாங்கத்துக்கு எப்பொழுதும் ஆதரவு காட்டியுள்ளார்கள். உதவிப் போஸ்ட் மாஸ்டர்களும் அவ்வாறே அரசாங்கத்தை ஆதரித்து வந்துள்ளார்கள். பொதுமக்களுக்கு அவர்கள் நல்ல முறையிற் சேவை செய்வார்கள் என அரசாங்கம் நம்பியிருக்க முடிந்தது'.

சப் போஸ்ட் மாஸ்டர்கள்சங்கங்களின்பிரதிநிதிகள் உட்பட, உதவிப் போஸ்ட் மாஸ்டர்களுக்கான சட்டங்களை ஆராய்வதற்கென ஒரு தெரிவுக் கமிட்டியை நியமிக்கும்படி உதவி போஸ்ட் மாஸ்டர்கள் சங்கம் கேட்டுள்ளது. இக் கமிட்டி உதவிப் போஸ்ட் மாஸ்டர்கள் தொழில் நிலைமைகளை ஆராய்ந்து சிபார்சுகள் செய்வதற்குப் பயன்படும்.

உதவிப் போஸ்ட் மாஸ்டர்கள் நிரந்தர சேவையாளர்களாகவும் 'பென்ஷன்' உரிமை உடையவர்களாகவும் கணிக்கப்படவேண்டும் என்றும் போஸ்ட் மாஸ்டர் சங்கம் கோரியுள்ளது.

நிதிமந்திரி இலங்கை திரும்பியதும் சப் போஸ்ட் மாஸ்டர்கள் கோரிக்கை பற்றி அவருக்குப் பிரஸ்தாபிப்பதாக திரு. கலுகல்லே உறுதிகூறியுள்ளார்.

உதவிப் போஸ்ட்மாஸ்டர்கள் தொழில் நலன்களை ஆராய்வதற்கென, திறைசேரி அங்கத்தவர் ஒருவர் உட்பட தெரிவுக்கமிட்டியொன்றை நியமிக்குமாறு நிதி மந்திரியைத் தான் கேட்டுக்கொள்வார் எனவும் திரு. கலுகல்லே கூறியுள்ளார்.

அகில இலங்கை சப் போஸ்ட் மாஸ்டர்கள் சங்கமும் உதவிப் போஸ்ட் மாஸ்டர்கள் தேசியசங்கமும் ஒன்றுசேரும்படியும் அரசாங்கத்துக்கு விசுவாசமுள்ளவர்களாக இருக்குமாறும் போக்குவரத்து மந்திரி திரு. பி. பி. ஜி கலுகல்லே கேட்டுக்கொண்டார்.

---

## பொருளுணர்ந்து தேவார திருவாசகம் படிக்கவேண்டும்

### சுவாமி சச்சிதானந்தா பேச்சு

காங்கேசன்துறை, செவ்வாய்

"கருத்து விளங்காமல் தேவார திருவாசகங்களைப் படிப்பதில் பயனில்லை. பொருளுணர்ந்து பாடும் பொழுது நாம் அன்புருவாகிவிடுகிறேம். அன்பே சிவம் எனவே கடவுளைத் தேடி நாம் எங்கும் செல்லவேண்டிய அவசியமில்லாமற் போய்விடுகின்றது. வாழ்வின் எல்லாத் துறைகளிலும் அக்கருத்துக்கள் பரிணமிக்கின்றன. இதனல் நாம் நல்லவர்களாக வாழ முடிகிறது. வாழ்வு வளம் பெறுகிறது" இவ்வாறு யோகிராஜ் சச்சிதானந்த சுவாமிகள் சிமெந்துத் தொழிற்சாலை ஞானவைரவர் கோவிலில் நிகழ்ந்த சமயக் கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார். கூட்டத்திற்கு சிமெந்துத் தொழிற்சாலை தலைவர் டாக்டர் பேரம்பலம் தலைமை வகித்தார்.

---

## 'இடம் வலம் தெரியாத இடதுசாரிக் கட்சி'

—ஞெபேர்ட்

கண்டி, செவ்வாய்

'எமது நாட்டில் இன்றிருக்கும் இடதுசாரிக் கட்சியினருக்கு எது வலது எது இடது என்பது தெரியாது' என திரு: ஞெபேர்ட் குணவர்தன பேராதனையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:-

இன்று இந்த இடதுசாரிகள் நாட்டில் சோஷலிசத்தை உருவாக்குவதற்கு பெரும் தடையாக இருக்கின்றனர்.

இன்றுள்ள அரசியற்கட்சிகளைப் புனிதப்படுத்த வேண்டும்.

நம்நாட்டு தேசிய கலாச்சாரத்தைப் பற்றியும் சிங்கள மொழிபற்றியும் அக்கறைகாட்டாத எந்தக் கட்சிக்கும் இலங்கா அரசியலில் இடம்இல்லை.

மகாஜன எக்சத் பெருமுனைக் கட்சிக்கு மட்டும்தான் சோஷலிசத்திட்டம் ஒன்றுள்ளது.

# ஜி. ஸி. ஈ. வகுப்பில் மாணவர் இரு வருடங்கள் பயிலலாம்

கொழும்பு, செவ்வாய்

ஜி. ஸி. ஈ. இறுதி வகுப்பில் மாணவர்கள் இருவருடங்கள் தொடர்ந்து இருக்கலாம் என்றும் ஜி. ஸி. ஈ. ஆரம்ப வகுப்பில் ஒரு வருடமும் இந்த வகுப்பில் இரு வருடங்களும் தங்கியிருப்பதால் மூன்று வருடங்களுக்கு ஜி. ஸி. ஈ. வகுப்பில் பயிலுகிறார்கள் என்ற காரணம் கொண்டு அவர்களை பாடசாலையிலிருந்து வெளியேற்றக்கூடாது என வித்தியாதிபதி அரசாங்கப் பள்ளிக்கூட அதிபர்களுக்கும் வித்தியாதிபதியின் கீழுள்ள பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளார்.

ஐந்து பாடங்களில் மட்டும் பரீட்சை எழுதத் தகுதி பெற்றிருக்கும் மாணவர்களை ஜி. ஸி. ஈ. பரீட்சையில் தோற்ற அனுமதிக்க வேண்டுமென்றும் வித்தியாதிபதி அறிவித்துள்ளார்.

## தெல்லிப்பழையில் நவராத்திரி

தெல்லிப்பழை, திங்கள்

தெல்லிப்பழை மேற்குப் பொற்கலந்தம்பை மெய்ஞ்ஞான வைரவ சுவாமி கோயிலில் நவராத்திரிவிழா வெகு விமரிசையாக நடைபெறவிருக்கிறது. விசேஷ அபிஷேக ஆராதனைகளும் உபந்நியாசங்களும் நடைபெறவிருக்கின்றன.

## "மதம் வாழ்வில் பிரதிபலிக்கவேண்டும்"

### புனித தெரேசா திருநாளில் மதகுரு

உடுப்பிட்டி, திங்கள்

"யேசுவின் நெறியை மேற்கொண்டு புனித தெரேசா புனிதத்துவம் அடைந்தமை நமக்கெல்லாம் முன்னோடியாயிருக்க வேண்டும். மதம் வேறு, வாழ்வு வேறு என்ற மனோபாவத்தை விடுத்து வாழ்க்கையில் மதம் பிரதிபலிக்கச் செய்யவேண்டும்."

இவ்வாறு வதிரி அர்ச் அந்தோனியார் ஆலயத்தில் புனித தெரேசா திருநாளை ஒட்டி நடைபெற்ற திவ்விய பரிபூசையின்போது வண. ஜே. ஏ. கருணாகரன் அடிகளார் கூறினார். வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களும் நடைபெற்ற திருமுறை ஆராதனையின் பின்னர் நடைபெற்ற திருவிருந்தில் சுமார் 500 பேர் கலந்துகொண்டனர்.

## நெல்லியடியில் தொண்டர் படை

உடுப்பிட்டி, செவ்வாய்

நெல்லியடிப்பகுதியில் பெருகிவரும் களவுகளைத் தடுக்கும் நோக்கமாக கரவெட்டிவடக்கு கிராம விதானையார் திரு. கே. சுப்பிரமணியம் ஒரு தொண்டர் படையைச் சேர்க்கும் பணியை மேற்கொண்டுள்ளார்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.


## 1961-62-ம் வருட உணவு மான்யம்

### ரூ. 3 கோடி சேமிக்கப்படலாம்

கொழும்பு, திங்கள்

1961-62 ம் வருட உணவு மான்ய மசோதாவினால் 3 கோடி ரூபாய் சேமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. 1961-62 ம் நிதி வருடம் சென்றவாரம் ஆரம்பமாகியது. சர்வதேச மார்க்கெட்டில் சீனி விலை குறைந்த சமயத்தில் தான் இங்கு நிதிவருடம் ஆரம்பித்துள்ளது. சீனி இறக்குமதி பற்றிய பேச்சு வார்த்தைகள் வரவுசெலவுத் திட்டம் வகுத்த காலத்தில் முடிவாகாது இருந்தமையால் 3 கோடி ரூபாய் லாபம் வரும் என முன்பு எதிர்பார்க்கப்படவில்லை. இந்நிதி வருடத்தில் இலங்கைக்குத் தேவையான சீனியின் தொகையைக் குறைவான விலைக்கு வாங்குவதற்கான ஒழுங்குகள் வரையறவாக்கப்பட்டதன் பேரில் 3 கோடி ரூபாய் லாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

நிதிவருடத்துக்கென வரையறுக்கப்பட்ட திட்டத்தின்படி உணவு உபமான்ய மசோதாவுக்கு 24 கோடி ரூபாய்ஒதுக்கப்பட்டது. சென்ற நிதிவருடத்திலும் 4 கோடி அதிகமாகவே இவ்வருடம் ஒதுக்கப்பட்டது. 3 கோடி லாபத்தையும் சேர்த்துக்கொண்டால் உணவு உபமான்ய மசோதாவுக்கென 21 கோடி ரூபாயே ஒதுக்கப்பட்டுள்ளது எனலாம்.

ருத்தல் ஒன்றின் மீது 5 சதமாக மாவு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் அதனாலும் 4 கோடி ரூபாய் வரவு பெறப்படும். எனவே அதனாலும் உணவு உபமான்ய மசோதாவினால் லாபம் கிடைக்கும்.

வருமானவரிசெலுத்துவோர் அரிசி உபமான்யத்தை ரத்துச் செய்து கொள்ளுவதனாலும் 5 கோடி லாபம் பெறப்படும். எனவே வரவுசெலவுத் திட்டத்தின்படி உணவு உபமான்ய மசோதாவுக்கெனச் சென்ற வருடத்திலும் 4 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளதெனினும், உண்மையில் சென்றவருடத்திலும் குறைவாகவே இவ்வருட உணவு உபமான்யத்துக்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## வலி. வடக்கு ஆசிரிய சங்க நிர்வாகிகள்

மாவிட்டபுரம், திங்கள்

வலிகாமம் வடக்கு ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் திரு. எஸ். வாகீசர் தலைமையில் நடைபெற்றபோது 1961-62-ம் ஆண்டுக்கான புது வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ஏ. சிவநாதன், உபதலைவர்கள்: திரு எஸ். கந்தப்பிள்ளை, திரு. எஸ். சுந்தரசிவம், காரியதரிசி: திரு. பி. வி. நடராஜா, உதவிக்காரியதரிசி: திரு. எஸ். தியாகராஜா, தனாதிகாரி: திரு. ஆர். கணபதிப்பிள்ளை, கணக்குப் பரிசோதகர்: திரு. எம். சிவபாதசுந்தரம்.

## இ. போ. ச. வில் அரசியல் தலையீடு

மட்டக்களப்பு, செவ்வாய்

'மட்டக்களப்புக்கு அதிக பஸ்கள் தேவைப்படுகிறது. குறிப்பிட்ட பஸ்களை இங்கு அனுப்புவதற்கு இங்குள்ள மக்கள் ஆட்சேபம் தெரிவிப்பதனாலேயே இ. போ. ச. புதிய பஸ்களை அனுப்ப முடியாதிருக்கிறது என்பது வெறும் பொய்யான சாக்கு. இது அரசியல் ரீதியில் பழிவாங்குவதாக இருக்கிறது.'

இவ்வாறு வாழைச்சேனை பஸ் பிரயாணிகள் சங்க தலைவர் திரு. ஏ. சண்முகநாதன் இ. போ. ச. பற்றிய விசாரணைக் கமிஷன் முன்னர் தெரிவித்தார்.

கமிஷன் நேற்று மட்டக்களப்பு நகரமண்டபத்தில் தனது விசாரணையை ஆரம்பித்திருந்தது.

திரு. சண்முகநாதன் மேலும் கூறியதாவது:

மட்டக்களப்பிலிருந்து 20 மைல் தூரத்திலுள்ள கிராமமாகிய வாழைச்சேனைக்கு மாலை 5 மணிக்கும் 5-30 மணிக்குமிடையில் 5 பஸ்கள் செல்கின்றன. ஆனால் மட்டக்களப்பிலிருந்து 24 மைல் தூரத்திலுள்ள கல்முனைக்கு, இந்தப் பாதை வழியாக அதிக கிராம வாசிகள் செல்வதாக இருந்தும், ஒரு பஸ் ஆகுதல் செல்வதில்லை. இது ஒரு சாதாரண வழக்கமாக இருக்கிறது.

இ. போ. ச. வில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. அங்கு நீதி நிலவவேண்டும்.

## 2 சதலாபத்துக்கு ரூ. 75 அபராதம்

மாவிட்டபுரம், திங்கள்

மூளாயைச் சேர்ந்த அ. சின்னத்துரை என்பவர் 32 சதம் பெறுமதியான ஒரு ருத்தல் பாணை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக 34 சதமாக விற்றதாக உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. பி. சேனாதிராசாவினால் குற்றம் சாட்டி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் எதிரியை நீதிமன்றம் கலையும் வரை மறியலில் இருக்கும்படியும் 75ரூபாய் அபராதம் செலுத்தும்படியும் உத்தரவிட்டார்.

## 'ஸ்ரீ' பஸ் விவகாரம்

கொழும்பு, செவ்வாய்

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு நேற்றுவிடுத்த ஒரு அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்திருக்கிறது:

"சிறந்த பஸ்சேவை வேண்டுமென்று வடக்கு, கிழக்கு மாகாண எம். பி. க்களும், யாழ்ப்பாண மேயர், கிராமச் சங்கங்களின் தலைவர்கள், பஸ் பிரயாணிகள் சங்கங்கள் ஆகியோர் மீண்டும் மீண்டும் வேண்டுகோள் விடுத்து வந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணத்திலுள்ள பழைய பஸ்களுக்குப் பதிலாக சேவை செய்வதற்கு 'சிறி' எழுத்துப் பொறித்த இரண்டு புதிய பஸ்களை ஒக்டோபர் 5ந் திகதி இ. போ. சபை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தது.

"இந்த இரு பஸ்களில் ஒன்று ஒக்டோபர் 6ந் திகதி இரவு இ. போ. ச. டிப்போவிற்குள் குண்டுவீசப்பட்டு எரிக்கப்பட்டது. இந்த பஸ்கள் மறுநாள் காலை சேவைக்கு விடப்படவிருந்தன. பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர்".

## பீடிப்பீடிஸ் கழகப் போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், திங்கள்

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வீமன்காமம் வடக்கு பீடிப்பீடிஸ் கழக வருடாந்த உடற்பயிற்சிப் போட்டியில், விவேகானந்தர் இல்லம் 140 1/2 புள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தையும், நாவலர் இல்லம் 100 1/2 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்தையும் சுவீகரித்துக் கொண்டன.

மேற்பிரிவில் செல்வன் க. திருச்செல்வமும், மத்திய பிரிவில் செல்வன் சி. விக்கினேஸ்வரனும், கீழ்ப்பிரிவில்செல்வன் வே. மணிவாசகனும், பாலர் பிரிவில் செல்வன் வே. பால்ச்சந்திரனும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. தா. இராசரத்தினம் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்களை வழங்கினார்.

## வலைப்பந்தாட்டத்தில் நடேஸ்வரா வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வலைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வலைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் நடேஸ்வராக்கல்லூரி 2 கோல்களால் வெற்றியீட்டியது.

## ஹாட்லிக் கல்லூரி வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய்

வடமராட்சி ஆசிரியர் சங்க ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் திங்கள் பிற்பகல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியை 3-0 கோல்கள் அடித்துத் தோற்கடித்தது.

திரு. வி. அந்தோனிப்பிள்ளை மத்தியஸ்தம் வகித்தார்.

## அந்தர்யோக வகுப்பு முடிவு

தெல்லிப்பழை, திங்கள்

சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க ஆதரவில் கீரிமலைச் சிருப்பர் மடாலயத்தில் நடாத்தி வந்த அந்தர் யோக சாதனை வகுப்பு நேற்றிரவுடன் பூர்த்தியாகியது.


RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC
மொத்த விற்பனை விநியோகஸ்தர்கள்:
● மில்லஸர் லிமிட். கொழும்பு.
● எம். கே. ஏ. ஹமீது அன் கோ, குருநாகலை.
● என். எச். குமாரசிங்க அன் கோ, காலி.
● கூபர்ஸ் ஹாட் வெயார், [illegible]
● யாழ்ப்பாணம் கூட்டுறவுப் பண்டக சாலை, யாழ்ப்பாணம்
● எச். ஏ. பகஸ்ராவல அன் பிரதர்ஸ், பதுளை.
● எஸ். கே. பீட்டர் அப்பு அன் பிரதர்ஸ், பதுளை.
● எஸ். ஏ. செல்வநாயகம் அன் சன்ஸ் மட்டக்களப்பு.
பன்மடங்கு சிறந்த பாட்டரி இதுவே
பலமணித்தியால அதிக உத்தரவாத சேவை
யளிப்பதும் இதுவே
சக்தி
பலம்


முன்னெப்பொழுதையும் விட எவ்வளவோ முன்னேற்றம்!
RAY-O-VAC RAY-O-VAC RAY-O-VAC

## தேசிய சேவை

கொழும்பு, புதன்

தேசிய சேவைத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஆரம்பவேலைகளை காணி அபிவிருத்தி இலாகாவிலுள்ள ஒரு பிரதிதியேக பகுதி கவனிக்கும்.

கலவெலாவிலுள்ள அலுத்வீவா அணைத்திட்டம் வந்துறேசா குடியேற்றத்திட்டம் ஆகிய திட்டங்கள் பிரத்தியேக பகுதியால் மேற்பார்வை செய்யப்படும் திட்டங்களுள் வரும்.

இத்திட்டங்கள் செயல்படுத்தும்போது தேசிய சேவையிலீடுபடும் தொண்டர்கள் குறிப்பிட்ட இடங்களில் கூடாரங்களில் தங்கியிருப்பர்.

## வேலை தேடுபவர் தொகை அதிகரிப்பு

கொழும்பு, செவ்வாய்

இவ்வருடம் ஜூலைமாத இறுதியில் 1,53,113 பேர் தொழிற்கந்தோரில் வேலைக்காக பதிவு செய்துள்ளனர். சென்ற வருடம் ஜூலை மாதத்தில் பதிவுசெய்து கொண்டவர்களின் தொகையிலும் இது 20,616 அதிகம் எனத் தெரியவருகிறது.

இந்த வருடத்தில் 7 மாதங்களில் சராசரி 1,55,040 பேர் பதிவுசெய்துள்ளனர். சென்ற ஆண்டு இதே காலத்துக்குள் 1,29,853 பேர் பதிவுசெய்திருந்தனர்.

## சட்டவிரோதக் குடியேற்றக்காரர் கைது

மன்னார், செவ்வாய்

அரிப்பு பகுதியில் வந்திறங்கிய 11 சட்டவிரோதக் குடியேற்றக்காரரை மன்னார்பொலிஸார் கைதுசெய்துள்ளார்.

## கதிர்காமத்தில் பூஜை இல்லை

கதிர்காமம், செவ்வாய்

சென்ற ஞாயிற்றுக்கிழமை முதல் கதிர்காமத்தில் பூஜை நடைபெறவில்லை.

கதிர்காம ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை இறந்ததன்காரணமாகவே கோவிலில் பூஜை நடைபெறவில்லை. இதனால் கோவிலுக்குச்சென்ற பலர் பூஜை பார்க்கமுடியாது போயிற்று,

இறந்த குழந்தையின் சடலம் அப்புறபடுத்தப்படும்வரை பூஜைநடைபெறுதெனத் தெரிகிறது.

இவ்விதம் பூஜைநடைபெறுதிருப்பது இது இரண்டாவது தடவையாகும்.

# வெளிநாடு செல்பவர்கள் எப்படி பணம் பெறுகிறார்கள்?

## அரசாங்கம் ஆராயும்

கொழும்பு, திங்கள்


செலாவணிக் கட்டுப்பாட்டு இலாகாவிடமிருந்து அனுமதி பெறாது இங்கிருந்து பலர் எவ்விதம் வெளிநாடுகளுக்குச் சென்று ஏராளமான பொருள்களைக் கொண்டுவருகிறார்கள் என்பது செலாவணிக் கட்டுப்பாட்டு இலாகாவுக்கே ஒருபுதிராக இருக்கிறது.

5 வருடங்களுக்கு ஒருமுறை தான் ஒருவர் செலாவணிக் கட்டுப்பாட்டிலாகாவிடமிருந்து இவ்வாறு பணம் எடுத்துச் செல்வதற்கான அனுமதிபெற முடியும். ஒருவர் வெளிநாடு செல்வதாக இருந்தால் வருடமொன்றுக்கு ரூ. 50 பெறமுடியும்.

ஆனால் பலர் 50 ரூபாவுடன் இங்கிருந்து வெளிநாட்டுக்குச் சென்று நூற்றுக்கணக்கான ரூபாய் பெறுமதியான பொருட்களைக்கொண்டுவந்து விடுகின்றார்கள்.

வெளிநாடுகளில் இருக்கும் போது இவர்கள் எவ்விதம் பணம் பெறுகிறார்கள் என்பதை அறிய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

வெளிநாட்டுக்கு பணம் எடுத்துச்செல்வதற்கான செலாவணிப் பத்திரத்தை கொழும்பிலுள்ள ஒரு கோஷ்டி கமிஷனுக்கு வழங்குவதாகவும் இலாகா இதுவரை இவர்களைக் கண்டுபிடித்து வழக்குத் தொடர முடியவில்லையென்றும் செலாவணிக் கட்டுப்பாட்டு இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

புதன் 11-10-61

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 10-00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 நேயர் விருப்பம் 7-30 கே. சபாரத்தினம்—வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விவாதமேடை, 9-45 ஜானகி சங்கரஜயர்—பாட்டு,

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 எஸ். நரஸம்மா—வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு 1-00 பெண்ணுலகம், 1-50 குரல் இசை, 2-10 பாலக்காடு டி. வி. கிருஷ்ணமூர்த்தி—பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்னடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல் 7-45 'இரத்த தானம்' சித்திரம், 8-00 எஸ். நரஸம்மா -வீணை, 8-30 திரைப்படஇசை 9-15 நல்லுரை, 9-30 டெல்லி அஞ்சல், 9-50 இசைமாலை.

## "பாரதி இலக்கியம்" பண்டிதர் பேச்சு

உடுப்பிட்டி, செவ்வாய்

"பாரதி சங்ககாலக் கருத்துகளின் பிரதிபிம்பமாக வாழ்ந்தாரெனினும் அக்கருத்துகளுக்கு உயிர்கொடுத்து, கவர்ச்சியான செயலாற்றத் தூண்டக் கூடியமுறையில், எளிமையும் தெளிவும் சேர்ந்த நடையில் அவற்றைப் பாடினார்."

இவ்வாறு உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் மகளிர் கல்லூரி மாணவர் மன்றத்தில் உரை நிகழ்த்திய அகில இலங்கைப் பண்டித பட்டதாரிகள் சங்கச் செயலாளர் பண்டிதர் கே. வீரகத்தி கூறினார். பண்டிதர் எஸ். நமசிவாயத்தின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. வீரகத்தி மேலும் கூறியதாவது:-

"திரிகூட ராசப்பர் தொடக்கம் பதினெண்சித்தர் உட்பட வேதநாயகம்பிள்ளை ஈறாக உருவாக்கப்பட்ட கவிதைகளின் பிழிவே பாரதி இலக்கியமாகும்."

# 'இந்தியர் பிரச்னையை இன்றே தீர்க்கவேண்டும்

## இப்பிரச்னை தீர்ந்துவிட்டால் வேறுபாடுகள் நீங்கிவிடும்'

### தொழிற் சங்கப் பிரமுகர் கருத்து

நாவலப்பிட்டி, திங்கள்

"தோட்டத்தொழிலாளிதான் இந்நாட்டின் ஜீவநாடி. இதை வெறும் பேச்சாக மட்டும் எண்ணக்கூடாது. பரிசுத்தமாக மனதிலே நினைத்து மதிப்பும், மரியாதையும் காட்டப்படவேண்டும். துரதிருஷ்டவசமாக இந்நாட்டில் அந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்காமல் ஒருசில வகுப்புவாதிகள் துவேஷ மனப்பான்மையுடன் நடந்துகொள்வது வருந்தத்தக்கது. தோட்டத் தொழிலாளர்களின் சேவை மகத்தானது என்று நாம் மட்டும் கூறுவதில்லை. இந்நாட்டைவிட்டு வெளியேறும் தோட்டச் சொந்தக்காரர்களாயிருந்த வெள்ளை முதலாளிகளே கூறியிருக்கிறார்கள்"

இவ்வாறு வட்டவளையைச் சேர்ந்த கரோலினா இனுக்குவத்தை தோட்டத்தில் நடைபெற்ற ஒருகூட்டத்தில் லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் நாவலப்பிட்டி ஜில்லாப் பிரதிநிதி திரு. யூ நவரட்ன குறிப்பிட்டார்.

லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் பொதுக்காரியதரிசி திரு. எஸ். செல்லையா இக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். திரு. நவரட்ன மேலும் கூறியதாவது:-

தோட்டத் தொழிலாளர்கள் பல வழிகளிலும் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை தொழிற்சங்கங்கள்தான் அறிய முடிகிறது. இதற்கு ஒருமுடிவு காண வேண்டுமானால் முதலில் இந்தியர் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். இப் பிரச்சினை நீடித்துக்கொண்டே போகுமானால் பாகுபாடும் வளர்ந்துகொண்டேதானிருக்கும். அதற்குள் பாதிப்பேர் மனித காலன்களால் ஈவு இரக்கமற்ற முறையில் சாகடிக்கப்படுவதும் மிஞ்சிக் கொண்டேதான் இருக்கும்.

#### நேருவின் காலத்திலேயே தீர்த்துவிடவேண்டும்

இலங்கை வாழ் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமைப் பிரச்சினையைச் சமயசஞ்சீவியாகப் பாவிக்கும் அரசியல்வாதிகளுக்கு இந்த அரசாங்கம் உடந்தையாக இருக்கக்கூடாது. இன்றைய இந்திய பிரதமர் திரு ஜவஹர்லால் நேருவினுடைய காலத்திலேயே தீர்த்துக்கொள்ள வேண்டிய இப் பிரச்சினைக்கு நடுநிலைமைக் கொள்கையை கடைப்பிடித்தொழுகும், சிறிமாவோவின் அரசாங்கமும் வசதியாயிருக்குமென்று கருதுகிறோம். பர்மாவிலுள்ள இந்தியர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டதற்கு காரணம் இந்தியாவும், பர்மாவும் நடுநிலைக் கொள்கையுடைய அரசாங்கங்களாயிப்பதுதான். ஸ்ரீ நேருவின் ஆட்சிக்குப் பின்னர் வரும் ஆட்சி காங்கிரஸ் ஆட்சியானலும், அல்லது பிற கட்சி ஆட்சியானலும் அது ஆபத்தாகவே முடியும் என்று இப்போதே ஜோஸ்யம் கூட கூறலாம். இலங்கை ஆட்சியின் மாற்றங்களையும் நாம் நினைவில் வைக்கவேண்டும்.

இப் பிரச்சினை தீர்ந்தால்தான் தேசீய ரீதியில் இன, மத, மொழி வேறுபாடின்றி நாட்டுமக்கள் சௌஜன்யமாக வாழ முடியும். பரிபூரண உரிமைகளுடன் உலாவ முடியும். இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படும்போது லங்கா சமசமாஜக் கட்சிப் பிரமுகர்களையும் கலந்தாலோசித்தால் ஒத்துழைப்பு நல்குவோம்.

சினிமாஸ் திரைகளில் வெகுவிரைவில் எதிர்பாருங்கள்!

எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி நடித்த

உலகம் சிரிக்கிறது

கடைசி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்

எஸ். எஸ். ராஜேந்திரன், சரோஜாதேவி நடித்த

மணப்பந்தல்

தினசரி மாலை 4-15 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும்

ALIAS JESSE JAMES
(ENGLISH)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## பலாலி கொலைவழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், செவ்வாய்

பலாலியில் கந்தையா அண்ணமலை என்பவரைச் சுட்டுக் கொல்ல முயன்றதாக பெரிய தம்பி நல்லையா என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றவாளியில்லை என ஜூரர்மார்கள் அபிப்பிராயம் தெரிவித்ததால் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா அவரை விடுதலை செய்தார்.

---

## மைசூரில் தஸாரா ஆரம்பம்

மைசூர், அக். 10

மைசூரில் இன்று தஸாரா கொண்டாட்டம் கோலாகலமாக ஆரம்பமாகியது.

---

## இ. போ. ச. வின் பெரும் குறைபாடு

கொழும்பு, செவ்வாய்

இ. போ. ச. வின் தொழில் நுட்பத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் போதியளவு இல்லை என சபை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

போர்மன், என்ஜினியரிங் கிரேடுகளில் இன்னும் உத்தியோகஸ்தர்கள் குறைவாகவே இருப்பதாகவும் இப்பகுதியில் 120 காலி ஸ்தானங்கள் நிரப்பப்படவேண்டியிருப்பதாகவும் இ. போ. ச. வில் உள்ள முக்கிய குறைபாடு அனுபவமுள்ள தொழில் நுட்பத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் போதியளவு இல்லாதிருப்பதேயென அவர் தெரிவித்தார்.

---

## 'நுளம்புகளைத் தவிர வேறு துணை இல்லை'

### சங்கத் தலைவர் கவலை

ரத்மலானை, செவ்வாய்

"நுளம்புகளைத் தவிர வேறு எவரும் எமது நிலைமை பற்றி எவ்வித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை. நுளம்புகளே எங்கள் நெருங்கிய கூட்டாளிகளாக இருக்கின்றன."

இவ்வாறு டி' சொய்சா தோட்ட நலன் பாதுகாப்புச் சங்கத்தின் தலைவர் திரு. வி. டி. டி' சொய்சா, சங்கத்தின் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். பிரஸ்தாபக் கூட்டம் நேற்று முன்தினம் ரத்மலானையில் நடைபெற்றது. திரு. வி. டி. டி' சொய்சா மேலும் கூறியதாவது:

"தெஹிவளை, கல்கிசை நகரசபை நிருவாக எல்லையுள்ளும், கோட்டை கிராமசபை நிருவாக எல்லையுள்ளுமே டி' சொய்சா தோட்ட நலன் பாதுகாப்புச் சங்கத்தின் அங்கத்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். ஆனல் இந்த நகரசபையோ கிராமசபையோ அங்குள்ள மக்களின் நிலைமை பற்றி எதுவித அக்கறையும் எடுப்பதில்லை. எமது பகுதிகளில் வடிகால்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. மழை காலத்தில் முழு நிலப்பகுதியிலும் வெள்ளமும் சேறும் ஏற்படுவதால் நுளம்புகள் பல்கிப்பெருகுகின்றன. மக்கள் மிகுந்த பீதியுடன் வாழுகிறார்கள். முக்கியமாகப் பிள்ளைகளின் தேகசுகத்தைப் பற்றி பெரிதும் கவலைப்படுகிறார்கள். தெருக்களில் வெளிச்சம் எதுவுமில்லை. வீதிகளோ சுத்தம் செய்யப்படுவதில்லை. பொது மக்களுக்குத் தேவையான வசதிகள் எதுவும் இங்கு இல்லை. கொழும்புக்கு அண்மையிலுள்ள ரத்மலானை போன்ற இடத்தில் எதிர்பார்க்கக்கூடிய வசதிகள் எதுவும் இங்கு இல்லை."

சங்கத்தின் உதவித் தலைவர் திரு. அத்துறுக்குலசிங்கா பேசுகையில் கூறியதாவது:-

"இங்குள்ள தலஸ்தாபன சபைகள் இரண்டும் பெருந்தொகையான வரிகளை வசூலிப்பதிலேயே கவனத்தைச் செலுத்துகின்றன. ஆனல் மக்கள் தாம் செலுத்தும் வரிக்குப் பதில் எதுவித நன்மையும் பெறுவதில்லை."

அடுத்த ஆண்டுக்கான செயற்குழு இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

## எருக்கலம்பிட்டியில் 12 வீடுகள் தீக்கிரை

மன்னர், திங்கள்

மன்னர் வடக்கு எருக்கலம்பிட்டிக் கிராமத்தில் சுமார் 12 வீடுகள் இன்று மாலை தீப்பிடித்து எரிந்தன. மன்னர் பொலிசார் ஸ்தலத்துக்கு வந்த போது அங்கு உதவிசெய்துகொண்டிருந்த தோட்டவெளி இராணுவத்தினரும் ஊரவர்களும் தீயை அணைத்தனர்.

பல ஆடுகளும் கோழிகளும் மற்றும் பொருள்களும் சேதமடைந்தன.

தபாற்கந்தோரின் அருகாமையில் ஏற்பட்ட இப் பெருந் தீவிபத்தைப் பற்றிப் பொலிசார் புலன் விசாரணை செய்கின்றனர். மன்னர் மாவட்ட காரியாதிகாரி திரு. என். வேதாரணியசேயோன் உதவியளிப்பதற்காக அங்கு சென்றுள்ளார்.

---

## 4 கொலைகள் சம்பந்தமாக பொலிசார் தேடிவரும் நபர்

### பிலியந்தலையில் ஒளித்திருக்கிறாராம்

கொழும்பு, செவ்வாய்

4 கொலைகள் சம்பந்தமாக ஒரு நபரை, இன்ஸ்பெக்டர் டி. சில்வா தலைமையில் 15 பேரடங்கிய ஒரு பொலிஸ் கோஷ்டி இரவு பகலாகத் தேடி வருகிறது. இப்போது இந்த நபர் பிலியந்தலை, ஹோமகம, கொட்டாவ ஆகிய இடங்களிலுள்ள மக்களுக்கு அச்சத்தை விளைவித்து வருவதாய்த் தெரிகிறது. அவர் பிலியந்தலையிலுள்ள ஒரு கருவாக் காட்டில் ஒளித்திருப்பதாய்ப் பொலிசார் நம்புகின்றனர். 37 வயதான இவருக்கு வலது காலைவிட இடது கால் கட்டையாய் இருப்பதாகப் பொலிசார் கூறுகின்றனர்.

---

## சமயப் பணியாற்றி வரும் இலங்கையரல்லாதார்

### விசா வரி வசூலிப்பதற்கு டாக்டர் கலீல் கண்டனம்

யாழ்ப்பாணம், புதன்

பாடசாலை ஊழியர் சம்பளத்தை நிர்ணயிக்க ஓர் சபையை நியமிக்குமாறு தொழில் கமிஷனரைக் கேட்டுக் கொள்வதற்கு ஓர் குழுவை கமிஷனரைப் பேட்டி காண அனுப்புவதென வட இலங்கை பாடசாலை ஊழியர் சங்கம் முடிவு செய்துள்ளது.

இக்கூட்டம் அண்மையில் உபதலைவர் திரு. கே. நடராசா தலைமையில் நடைபெற்றது.

வடபிரதேச வித்தியாதிபதியாக நியமனம் பெற்றுள்ளமையைப் பாராட்டி திரு. எஸ். யூ. சோமசேகரத்துக்கு ஓர் பாராட்டுச் செய்தியை அனுப்புவதெனவும் வித்தியாபகுதியின் நிருவாகத்தில் இயங்கும் சில பாடசாலைகள் ஊழியர்களின் சம்பளத்தில் நாலு வீதத்தை அரசாங்க சேமலாப நிதியாக எடுப்பதற்குப் பதில் பத்து வீதத்தை அறவிடுவதுபற்றி உதவி வித்தியாதிபதியைப் பேட்டி காண்பதற்கு ஒரு குழுவை அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

---

சம்பளத்தை

## நிர்ணயிக்க சபையை நியமிக்கவும் பாடசாலை ஊழியர் சங்கம் கோரிக்கை

கொழும்பு, செவ்.

"இலங்கையிலிருந்து சமயப் பணியாற்றிவரும் இலங்கையரல்லாத பிறதேசத்தவர்களிடமிருந்து அவர்கள் இலங்கையில் இருப்பதற்காக விசாவரி வசூலிக்கப்படுவது ஒரு கொடூரமான செயலாகும். இந்த உறைவிட வரியைப் போல சின்னத்தனமும் கொடூரமும் நிறைந்த வரிமுறை வேறெதையும் நான் காணவில்லை."

அகில இலங்கை முஸ்லிம் மன்றத்தின் 28-வது வருடாந்தக் கூட்டத்தில் பேசுகையில் டாக்டர் எம். சி. எம். கலீல் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

"சிலர் இந்த விசா வரியை ஏற்கெனவே செலுத்திவிட்டதற்காகத் தொடர்ந்தும் இவ்வரியை வசூலிக்க வேண்டுமென்றில்லை. மத 'மிஷனரிகள்' இங்கு வந்து தமது சமயப் பிரசாரம் செய்வதைத் தடுப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகவிருந்தால் 'வரி செலுத்தத் தயாராக இருக்கும்வரை மிஷனரிகள் சமயப் பிரசாரம் செய்யலாம் என்று அரசாங்கம் சொல்லியிருக்க வேண்டியதில்லை."

"இலங்கையிலுள்ள வெவ்வேறு மத மிஷனரிகள் இந்நாட்டில் ஆத்மீக அறிவும் ஒழுக்க நெறியும் வளர்வதற்குப் பாடுபடுபவர்கள்."

"எம்மீது எவ்வளவு வரியையும் சுமத்தலாம். பரவாயில்லை. நாம் செலுத்தும் வரி அவ்வளவும் நாட்டின் அபிவிருத்திக்கும் மக்கள் நலனுக்கும் பிரயோசனப்படுத்தப்படும் வரை நாம் அதை ஆட்சேபிக்கப்போவதில்லை."

"மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எதுவித பரிகாரமும் தேடிக்கொள்ளாததுபற்றி எமது கவலையைக் குறிப்பிட விரும்புகின்றோம். ஒற்றுமையில்லாவிட்டால் எந்த நாடும் முன்னேற முடியாது. எனது கருத்தின்படி மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் அரசாங்க மொழிகளாக வேண்டும். நாடு முழுவதும் ஒற்றுமை நிலவுவதற்கு இதுவே ஒரு வழியாகும்.

நியாயமான கோரிக்கை எதுவும் மக்களுக்கு வழங்கப்படாத சமயத்தில்தான் நியாயமற்ற கோரிக்கைகளையும் வேண்டிக் கொள்ளுவார்கள் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்திருக்க வேண்டும்."

---

## ஐ. நா. வை மாற்ற ரஷ்யா வற்புறுத்து

மாஸ்கோ, அக். 10

ஐ. நா. மகாசபையை நியுயோர்க்கிலிருந்து வியன்ன, ஜெனிவா அல்லது வேறு நடு நிலைமை நகரத்துக்கு மாற்றுமாறு ரஷ்யா இன்று மீண்டும் வற்புறுத்தியது.